REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 16 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 40 | Wednesday 16, February, 2022 | 16 பக்கங்கள் | 30/-

## அமரர் எஸ்.டி. சிவநாயகம் நினைவு முத்திரை இன்று வெளியீடு



இலங்கையின் தமிழ்ப் பத்திரிகையுலகில் தலைசிறந்தவர்களாகப் போற்றப்படுவோரில் ஒருவரும், சத்திய சாய் பாபா மத்திய நிலைய ஸ்தாபகருமான அமரர் எஸ்.டி. சிவநாயகத்தின் நூறாவது பிறந்த நாள் இன்றாகும். எஸ்.டி. சிவநாயகம் நூற்றாண்டு நிகழ்வுகளின் முன்னோடியாக எஸ்.டி.சிவநாயகம் 06

## நாட்டில் எதிர்வரும் 03 மாதங்களுக்கு மின் துண்டிப்புக்கான அவசியமில்லை

### பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

**தெஹிவளை, கல்கிஸ்சை விசேட நிருபர்**



நாட்டில் எதிர்வரும் 03 மாதங்களுக்கு மின்துண்டிப்பு மேற்கொள்வதற்கான அவசியமில்லையென பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று தெரிவித்தது.

அதற்கமைய, குறுகிய காலப்பகுதிக்கு தனியார் நிறுவனங்கள் தனியான ஜெனரேட்டர்கள் இருந்தால் அவற்றினூடாக மின் உற்பத்தியை பெற்றுகொள்ள முடியுமென்றும், முடிந்தளவுக்கு இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். அதுதொடர்பில் அவர் 06

## பெருந்தோட்ட குடும்பங்களுக்கு மாதாந்தம் சலுகை விலையில் மா!

### அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது

**ஷம்ஸ் பாஹிம்**



தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சலுகை விலையில் மாதாந்தம் 15 கிலோ கோதுமை மா வழங்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இது தொடர்பில் நிதி அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கான முன்மொழிவுகளுக்கு ஏற்கெனவே அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இம்முன்மொழிவுகளில் தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு கோதுமை மா நிவாரணம் வழங்குதல் தொடர்பான யோசனை 06

## ச.தொ.ச ஊடாக குடிநீர் போத்தல் திட்டம் அறிமுகம்

### வெற்று போத்தலுக்கு ரூ.10 மீள வழங்கல்

**ஷம்ஸ் பாஹிம்**



ச.தொ.ச ஊடாக சூழலுக்கு பாதகமற்ற முறையில் குடிநீர் போத்தல்களை விநியோகிக்க இருப்பதாகவும் வெற்றுப் போத்தல்களை திருப்பி வழங்கினால் 10 ரூபா பணம் வழங்க உள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். சகல அரச நிறுவனங்களிலும் ச.தொ.ச குடிநீர் போத்தல்களை அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் இந்தத் திட்டத்தினூடாக வெற்று குடிநீர் போத்தல்களினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு குறைக்கப்படுமென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். 06

### எவ்விதமான இடையூறுகள், தடங்கல்கள் வந்தாலும்

# கருத்துச் சுதந்திரத்திற்கு தடை போட அரசாங்கம் இடமளிக்காது

### சமுத்தித்த விடயத்தில் துரித விசாரணைகள் முன்னெடுப்பு



**ஷம்ஸ் பாஹிம்**

எந்த விதத்தில் வந்தாலும் கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கு அழுத்தமோ தடையோ போடும் முயற்சிக்கு அரசாங்கம் இடமளிக்காது.

எந்த விதத்திலும் இவ்வாறான விடயங்களை அரசாங்கம் ஊக்குவிக்கவோ நடந்ததை மறைக்கவோ முயலாதென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்தவின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் பல கோணங்களில் துரித விசாரணை முன்னெடுக்கப்படுவதுடன் சில தரப்பினர் குறியீட்டாக குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாக தெரிவித்த அமைச்சர், பொலிஸ் விசாரணைகள் மூலம் குற்றவாளிகளை வெளிப்படுத்த தவறும் பட்சத்தில் அந்த பொறுப்பு அரசின் மீதே வருமென்றும் குறிப்பிட்டார்.

**ஊடகவியலாளர் சமுதித்தவின் வீடு தாக்கப்பட்டமையை அரசு வன்மையாக கண்டிப்பதாக ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவிப்பு**


அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்தவின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறோம். முற்றாக நிராகரிக்கிறோம். 06

### ரூபா. 2000 பெறுமதியில் அத்தியாவசிய பொருட்கள்;

## குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு நிவாரண பொதி

### சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் தெரிவாவர்

**ஷம்ஸ் பாஹிம்**



ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் குறைந்த வருமானம் கொண்ட 40 பின்தங்கிய குடும்பங்களுக்கும் 2,000 ரூபா பெறுமதியான நிவாரணப் பொதியொன்று வழங்கப்படவுள்ளது.ஜனாதிபதி, மற்றும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவை இவ்வாறு தீர்மானித்துள்ளது. பொருட்களைக் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் 06

### சுகாதார அமைச்சருடனான பேச்சையடுத்து

## போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்ட சுகாதார ஊழியர்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் கடந்த 9 நாட்களாக மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிடத் தீர்மானித்துள்ளதாக சுகாதார தொழிற்சங்க சம்மேளனத்தின் இணைப்புச் செயலாளர் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கூடிய மேற்படி சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு எதிர்வரும் 14 தினங்களுக்கு தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிடுவதற்குத் 06

## சைக்கிள் பயணங்களை ஊக்குவிக்க அரசு முடிவு

### அரச அதிகாரிகள், MPக்களுக்கும் அறிவுரை



எதிர்வரும் நாட்களில் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் சைக்கிளில் பயணிக்க வேண்டி ஏற்படுமென சுற்றுச் சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.பாதுகாப்பு பிரச்சினைகளின் காரணமாக ஒரே நேரத்தில் இதனை நடைமுறைப்படுத்த முடியாவிட்டாலும், முறையாக என்றாவதொரு நாள் அமைச்சர்களும் எம்பிக்களும் சைக்கிளில் பயணிக்க நேரிடும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இப்போது அரச அதிகாரிகள் சைக்கிளில் பணிக்கு வருவதாகவும், 06

## அத்தியாவசியப் பொருட்களை தடையின்றி விநியோகிக்க ஏற்பாடு

### ஜனாதிபதியினால் பசில் தலைமையில் குழு நியமிப்பு

**ஷம்ஸ் பாஹிம்**



அத்தியாவசிய பொருட்களை தட்டுப்பாடின்றி சந்தைக்கு விநியோகிப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கை ரீதியான பரிந்துரைகள் மற்றும் தீர்வுகளை முன்வைப்பதற்காக அமைச்சரவை உப குழுவொன்றை நியமிப்பதற்காக ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

இதன் தலைவராக நிதி அமைச்சர் செயற்பட 06



இந்தியன் எண்ணெய் நிறுவனத்தினால் (ஐ.ஓ.சி) வழங்கப்பட்ட 40,000 மெற்றிக் தொன் எரிபொருளை இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். கொழும்பு துறைமுகத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடுகளுக்கு மத்தியில் இந்தியன் எண்ணெய் நிறுவனத்திடமிருந்து 40,000 மெற்றிக் தொன் டீசலை கொள்வனவு செய்ய அமைச்சரவை அண்மையில் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

### தேர்தல் முறை தொடர்பில்

## 24 ஆம் திகதி சகல கட்சிகளுடனும் தேர்தல்ஆணைக்குழு பேச்சுவார்த்தை 03

## பயங்கரவாத தடை சட்டத்துக்கு எதிராக நீதிமன்றில் மனு

Dr. பா. சரவணமுத்து தாக்கல் 03

## சமுதித்த வீடு மீதான தாக்குதல்; 32 பேரிடம் பொலிஸ் வாக்குமூலம்!

### தொலைபேசி தரவுகளை பெற நீதிமன்றம் அனுமதி



தனியார் தொலைக்காட்சி சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரமவின் இல்லத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் 32 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். பிலியந்தலை பொலிஸாரால் 25 பேரிடமும், கெஸ்பேவ பொலிஸாரால் 07 பேரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் 06

## EPF,ETF என்பன மிகைக்கட்டண வரி அறவிடுவதிலிருந்து நீக்கம்

### நல்லாட்சியில் கம்பனிகளாக அறிவித்தமையே குழப்ப நிலைக்கு காரணம்

**ஷம்ஸ் பாஹிம்**




மிகைக் கட்டண வரி விதிக்கப்படவுள்ள நிறுவனங்களில் EPF, ETF உள்ளிட்ட நிதியங்கள் உள்ளடங்கவில்லையென நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தியுள்ளார். மிகைக் கட்டண வரி சட்டம் மீதான விவாதத்தின் போது 06

## சம்மாந்துறைக்கு விஜயம் செய்த சஜித்


### வைத்தியசாலைக்கு உபகரணங்கள் வழங்கல்



ஐக்கிய மக்கள் சக்தியின் ஒருங்கிணைவாக ஆரோக்கியமான நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "ஜன சுவய" 06

## தெளிவத்தைக்கு இன்று 88 வயது

### கொழும்பில் நண்பர் வட்டம் பாராட்டு



மூத்த எழுத்தாளர், சிறுகதை ஆசிரியர் சாகித்ய ரத்னா தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு இன்று 88வது பிறந்த தினமாகும். மலைநாட்டு எழுத்தாளர் மன்ற தலைவராக கடந்த பல ஆண்டுகளாக இருந்து வருகின்றார். இவர் 06

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்:

## மைத்திரியின் மனு மீதான விசாரணை மார்ச் 9இல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

நேற்றைய தினம் ப்ரேங் குணவர்தன 06

### சிவில் செயற்பாட்டாளர்

## செஹான் மாலக கமகேவுக்கு பிணை



கைது செய்யப்பட்டிருந்த சிவில் செயற்பாட்டாளர் செஹான் மாலக கமகே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை நீதவான் நீதிமன்றத்தில் அவர் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போது அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. சிவில் செயற்பாட்டாளர் செஹான் மாலக கமகே குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் பாணந்துறை பிரதேசத்தில் கைது 06

## 12 வயது சிறுமி மீது துப்பாக்கிச் சூடு

### 21 வயது இளைஞன் கைது!



ஹப்புத்தளை – கொஸ்லாந்தை – கெலிப்பனவளை பகுதியில் 12 வயதுடைய சிறுமியின் வாயில் துப்பாக்கிச்சூடு நடத்திய இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த சிறுமி சீனிகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக 21 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். 06

## இலஞ்ச ஊழல் வழக்கிலிருந்து அமைச்சர் கெஹலிய விடுதலை



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு தேவைப்படாத சந்தர்ப்பத்தில், மேம்மாட்டு செயற்றிட்டம் ஒன்றுக்காக 600 ஜி.ஐ. குழாய்களை கொள்வனவு செய்தமை ஊடாக அரசுக்கு 9 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்படுத்தியதாக முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் தற்போதைய சுகாதார அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக தொடரப்பட்டிருந்த ஊழல் மோசடி வழக்கிலிருந்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் 06

### விக்கல் வீராச்சாமி



கேஸ் பிரச்சனை முடிஞ்சது, சீமெந்து பிரச்சனையும் ஓகே, கொள்கலன்கள் நாளை விடுவிக்கப்படும். தலைவரே, இனி எத வைச்சு அறிக்கை.....

தம்பி, தாதிமார் பிரச்சனை இருக்கு, புதுசா ஊடகவியலாளர் தாக்குதல் சம்பவம் இருக்கு, இத வைச்சு கொஞ்ச நாள் ஓடலாம் பயப்படாதே...!!!

## சர்வதேச செய்திகள்

# உக்ரைன் எல்லையில் இருந்து ரஷ்ய படையினர் சிலர் வாபஸ்



உக்ரைன் எல்லையில் குவிக்கப்பட்டிருக்கும் படையினரில் சிலரை வாபஸ் பெற்றதாக ரஷ்யா அறிவித்துள்ளது. பாரிய அளவிலான போர் ஒத்திகைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றபோதும் சில பிரிவுகள் தமது முகாமுக்கு திரும்பி இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனினும் வாபஸ் பெறப்பட்ட எண்ணிக்கை கூறப்படாததோடு இது தற்போதைய பதற்றத்தை தணிக்கும் என்று உறுதி செய்யப்படவில்லை.

உக்ரைன் எல்லைக்கு அருகில் 100,000க்கு அதிகமான துருப்புகளை குவித்திருந்தபோதும் உக்ரைன் மீது தாக்குதல் தொடுக்கும் திட்டம் இல்லை என்று ரஷ்யா தொடர்ந்து மறுத்து வருகிறது.

உக்ரைன் எல்லை மாவட்டங்களில் போர் ஒத்திகையில் ஈடுபட்டிருந்த துருப்பினரில் சிலர் வாபஸ் பெறப்பட்டுள்ளனர் என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

'போர் ஒத்திகைகள் உட்பட பல பயிற்சிகளும் திட்டமிடப்பட்டவாறு நடத்தப்பட்டன' என்று பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் இகோர் கொனசென்கோவ் தெரிவித்தார். வரும் பெப்ரவரி 20 ஆம் திகதி முடிவடையவுள்ள ரஷ்யா மற்றும் பெலாரஸ் இடையிலான பாரிய கூட்டு போர் பயிற்சி போன்ற சில ஒத்திகைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

'மேற்குலகின் பிரசாரங்கள் தோல்வியுற்ற தினமாக 2022 பெப்ரவரி 15 வரலாற்றில் இடம்பெறும். ஒரு சூடு கூட நடத்தப்படாமல் அவர்கள் அவமானப்படுத்தப்பட்டு அழிக்கப்பட்டுள்ளார்கள்' என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மரியா சகரோவா தெரிவித்துள்ளார்.

எனினும் பதற்ற சூழலை தணிப்பதற்கான இராஜதந்திர முயற்சிகள் நேற்றும் நீடித்தது. ஜெர்மனி சான்சலர் ஒலேப் ஸ்கோல்ஸ், நேற்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதேவேளை பெப்ரவரி 16ஆம் திகதி ரஷ்யா உக்ரைன் மீது படையெடுக்க வாய்ப்புள்ளது என்று சில மேற்கத்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வரும் சூழலில், அந்த நாளன்று உக்ரைன் மக்கள் ஒற்றுமையுடன், தேசிய கொடியை ஏற்றி, தேசிய கீதத்தைப் பாட வேண்டும் என்றும் அந்நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி கோரிக்கை விடுத்துள்ளார் என்று ரோய்ட்டர்ஸ் செய்தி முகமை தெரிவிக்கிறது.

"மேற்கத்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியை உக்ரைன் ஜனாதிபதி உறுதிசெய்யவில்லை; அந்தச் செய்திகள் குறித்து சந்தேகம் வெளியிடும் நோக்கிலேயே வோலோடிமிர் ஜெலன்ஸ்கி இவ்வாறு மக்களிடம் கோரியுள்ளார்," என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# கனடாவில் முதல்முறை அவசரகால நடவடிக்கை



கட்டாய தடுப்பூசிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முடக்குவதற்காக கனடா வரலாற்றில் முதல் முறையாக அவசரகால நடவடிக்கையை அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை காலவரையறை கொண்டது என்றும் நியாயமானது மற்றும் சரியான அளவில் இருக்கும் என்றும் ட்ரூடோ தெரிவித்துள்ளார். இதில் இராணுவம் பயன்படுத்தப்பட மாட்டாது என்றும் அவர் உறுதி அளித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்களுடன் தொடர்புபட்டவர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்கை முடக்க நீதிமன்ற உத்தரவு தேவை இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

போராட்டக்காரர்களை சிறையில் அடைக்கவும் அவர்களுக்கு அபராதம் விதிக்கவும், நாட்டின் முக்கியமான உட்கட்டமைப்புகளை பாதுகாக்கவும் பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கனடா தலைநகரில் நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளனர்.

அமெரிக்க மற்றும் கனடா எல்லையை கடக்கும் லொரி ஓட்டுநர்கள் கட்டாயம் தடுப்பூசி பெற வேண்டும் அல்லது அவர்கள் திரும்பும்போது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்ற புதிய விதியை அடுத்தே லொரி ஓட்டுநர்கள் இரண்டு வாரங்களுக்கு மேலாக ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

கனடாவில் 1988இல் நிறைவேற்றப்பட்ட அவசரநிலை சட்டத்தை அமல்படுத்த கடினமான சட்ட தடைகளை கடக்க வேண்டும். இச்சட்டம், 'கனடா மக்களின் வாழ்க்கை, உடல்நலன் அல்லது பாதுகாப்பு ஆகியவற்றுக்குக் கடும் ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலான் அவசர மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகளில' மட்டுமே பயன்படுத்த முடியும். சட்ட ரீதியான போராட்டங்கள் அவசரநிலையை அமல்படுத்த தகுதி பெறாது.

கனடாவின் நீதி அமைச்சர் டேவிட் லாமெட்டி திங்கள்கிழமை பேசுகையில், அவசரநிலையை பிரகடனப்படுத்துவதற்கான நிபந்தனைகள் இச்சூழலில் பூர்த்தியடைவதாக வாதிட்டார்.

# சகோதரியைக் கொன்றவரை விடுவித்தது பாக். நீதிமன்றம்



பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி, அந்நாட்டில் 'கௌரவக் கொலை' தொடர்பில் சட்டம் இயற்ற காரணமான சமூக ஊடக நட்சத்திரம் கன்தீல் பலோக் கொலையில் அவரது சகோதரரை பாகிஸ்தான் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒன்று விடுவித்துள்ளது.

2016ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த கொலையில் அந்தப் பெண்ணின் சகோதரர் முஹமது வசீம் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு எதிராக அவர் மேன்முறையீடு செய்தார்.

இந்நிலையில் இந்தக் குற்றச்சாட்டில் இருந்து அவர் முழுமையாக விடுவிக்கப்படுவதாக கிழக்கு நகரான முல்தானில் உள்ள நீதிமன்றம் ஒன்று கடந்த திங்கட்கிழமை தீர்ப்பு அளித்துள்ளது.

அவருக்கு மன்னிப்பு அளிப்பதாக அவரது தாய் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்திருப்பதாக அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். இந்த அறிக்கை அடிப்படையிலேயே நீதிமன்றம் அவரை விடுவித்ததா என்பது உறுதி செய்யப்படவில்லை.

சமூக ஊடக செயற்பாடுகள் காரணமாக 26 வயதான தனது சகோதரியை கழுத்து நெரித்துக் கொன்றதாக வசீம் ஒப்புக்கொண்டார்.

# 13 மாணவிகள் கற்பழிப்பு: ஆசிரியருக்கு ஆயுள் சிறை



இந்தோனேசியாவின் விடுதிப் பாடசாலை ஒன்றில் 13 மாணவிகளை கற்பழித்த குற்றச்சாட்டில் அந்தப் பாடசாலையின் உரிமையாளருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஹெரி விரவான் என்ற அந்த நபர் 11 மற்றும் 16 வயதுக்கு இடைப்பட்ட சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட சம்பவம் கடந்த ஆண்டு இந்தோனேசியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சமய ஆசிரியருமான விரவான் 2016 தொடக்கம் பெண்களை கற்பழித்திருப்பதோடு அதில் எட்டுப் பேர் கர்ப்பமுற்றுள்ளனர். அவர்கள் ஒன்பது குழந்தைகளை பெற்றுள்ளனர்.

இந்நிலையில் அவருக்கு மரண தண்டனை விதிக்கும்படி வழக்குத் தொடுநர்கள் வலியுறுத்தினர்.

எனினும் பண்டுங் மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று வழங்கப்பட்ட தீர்ப்பில் 36 வயதான அந்த ஆசிரியருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

தனது மகள் கர்ப்பமுற்றிருப்பதை பொற்றோர்கள் கண்டறிந்ததை அடுத்தே பல ஆண்டுகளாக இடம்பெற்று வரும் இந்த பாலியல் துஷ்பிரயோகம் கடந்த ஆண்டு வெளியுலகுக்கு அம்பலமானது.

# அமெரிக்கா எச்சரிக்கை

அல் கொய்தா மற்றும் ஐ.எஸ் சிறைக்கைதிகளைத் தலிபான்கள் விடுவித்துள்ளமை தொடர்பில் கவலை தெரிவித்துள்ள அமெரிக்க மத்தியக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்படவிருக்கும் ஜெனரல் மைக்கேல் எரிக் குரில்லா, வெளிநாட்டு பயங்கரவாதக் குழுக்கள் ஆப்கானிஸ்தானில் மீள ஒழுங்கமைப்பு பெறுவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் எதிர்கொண்டுள்ள முக்கிய சவால்களில் அல் கொய்தா மற்றும் ஐ.எஸ் அச்சுறுத்தலும் அடங்கும்.

அங்கு அவர்கள் மீண்டும் ஒழுங்கமைப்பு பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.



ஈரான் இஸ்லாமியக் குடியரசு தூதரகத்தின் ஈரான் கலாசார நிலையம் ஏற்பாடு செய்த ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் 43 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு, கருத்தரங்கு கலாசார நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கருத்தரங்கில் இலங்கை சமூக ஆய்வாளர் வணகத்துக்குரிய மொரகஸ்வே விஜித தேரர் உரையாற்றுவதையும் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தூதுவர் ஹஷேம் அஷ்ஜசாதே, அல் முஸ்தபா பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் ஜெய்னோலபேடி மிர்பாடெமி மற்றும் கலாசார நிலைய பணிப்பாளர் டாக்டர் பஹ்மான் மோசாமி ஆகியோரை படத்தில் காணலாம்.

படம் : ருசைக் பாரூக்



சிறுநீரக நோயிலிருந்து ரஜரட்ட மக்களை காப்பாற்றும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'நில் தியவர' குடிநீர் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையம் கலாவெவ தேர்தல் தொகுதியின் மகுலேவ, ஹெலபேவ பிரதேசத்தில் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன ஆரம்பித்து வைத்த போது,..

படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்



ஏ.ஜே.எம். முஸம்மில் அறக்கட்டளையின், 'காந்தா சவிய' மகளிர் சக்தி அமைப்பினால் வருடாந்தம், குறைந்த வருமானமுடைய குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் 'காந்தா சவிய' அமைப்பின் தலைவி பெரோஸா முஸம்மிலினால் வழங்கி வைக்கப்பட்டன.இதற்கமைய ஹாலிஎல யெல்வர்டன் தமிழ் வித்தியாலயம், பதுளை ரத்னபால வித்தியாலயம், மீகஹகிவுல வித்தியாலயம் மற்றும் வெலிமடை கந்துருதேக முஸ்லிம் வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.



அநுராதபுரம் மார்கட் நகரம், B 7 வீதி குண்டும் குழியுமாக, மழை காலங்களில் நீர் தேங்கி குளம் போன்று காட்சி தருகிறது.இதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது. படம் திறப்பனை தினகரன் நிருபர்

# தபால் பொதிகள் என்ற போர்வையில் வெளிநாடுகளிலிருந்து போதைப்பொருள்; சுங்க அதிகாரிகளால் கைப்பற்றல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுங்கத் திணைக்களத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப்பிரிவு அதிகாரிகள் மூலம் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளில் வெளிநாட்டுத் தபால் பொதிகளிலிருந்து ஒரு தொகை போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் மேற்படி அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கையின் போது வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்டிருந்த 5 பார்சல்கள் சந்தேகத்திற்கிடமாக இனங்காணப்பட்டுள்ளன.

இப்பார்சல்கள் பிரிட்டன், ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளிலிருந்து கொழும்பு மற்றும் கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த நபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

போலித்தபால்களுடன் குஷ்ரக கஞ்சா 472 கிராம் எக்டஷி என்ற வகை போதைப்பொருள் மாத்திரைகள் 302 ஆகியவற்றை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதன் சந்தைப்பெறுமதி சுமார் 9 மில்லியன் என அந்த அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி போதைப்பொருள் பார்சல்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.(ஸ)

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 பெப்ரவரி 16 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්




**தொழுகை நேரம்**

13 முதல் 17 வரை

| | |
|---|---|
| சுபஹ் - | 05.11 |
| லுஹர் - | 12.26 |
| அஸர் - | 03.47 |
| மஃரிப் - | 06.22 |
| இஷா - | 07.33 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மாசி 4

ராகுகாலம் : பகல் : 12.00 - 01.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: பவுர்ணமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | - வெற்றி |
| ரிஷபம் | - பாராட்டு |
| மிதுனம் | - தனம் |
| கடகம் | - போட்டி |
| சிம்மம் | - கோபம் |
| கன்னி | - முயற்சி |
| துலாம் | - நன்மை |
| விருச்சிகம் | - நிறைவு |
| தனுசு | - சுகம் |
| மகரம் | - பொறுமை |
| கும்பம் | - மறதி |
| மீனம் | - செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில்

## தென்னாபிரிக்க நாடுகளின் ஒத்துழைப்பை பெற உயர்ஸ்தானிகர் அமரசேகர நடவடிக்கை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரி தென்னாபிரிக்காவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சிறிசேன அமரசேகர தென்னாபிரிக்க நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள ஐ. நா மனித உரிமைப் பேரவை அமர்வு தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்திவரும் நிலையில் சக வாழ்வுடன் மக்கள் முன்னேற்றமடைந்துள்ள ஆபிரிக்க வலய நாடுகளின் முக்கியத்துவம் கருதி மனித உரிமை தொடர்பில் இலங்கை பெற்றுக்கொண்டுள்ள வெற்றிகள் சம்பந்தமாக தென்னாபிரிக்க நாடுகளின் அரச அதிகாரிகள் மற்றும் அந்நாடுகளின் பிரதிநிதிகளுடன் பல மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

அது தொடர்பாக அவர் நமீபியாவின் உயர்ஸ்தானிகர் வெய்க்கோகே நிகிவெட், சிம்பாப்வே தூதுவர் டி.டி. ஹமட்சிரிபி, மலாவியின் உயர்ஸ்தானிகர் ஸ்டெல்லா சி. ஹவுயா நடாவ் மற்றும் தென்னாபிரிக்காவிலுள்ள சுவிட்சர்லாந்தின் பொறுப்பாளர் வெரோனிக் ஹாலர் ஆகியோரை சந்தித்துள்ளார்.

இச் சந்திப்பின்போது அவர் வெளித்தரப்பினர் முன்னெடுக்கும் பொறிமுறையை விட தேசிய பொறிமுறையை உபயோகித்து தேசிய சமூக மற்றும் அரசியல் சூழலில் உள்நாட்டுப் பிரச்சினைகளை தீர்ப்பதன் முக்கியத்துவத்தை அவர் மேற்படி சந்திப்புகளின் போது தெளிவுபடுத்தியுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் வெளித் தரப்பினரின் தலையீடு இனப்பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்குவதாக அவர் இதனபோது குறிப்பிட்டுள்ளார்.

அதனைத் தீர்ப்பதற்கான அதிகாரமும் விருப்பமும் ஆற்றலும் இலங்கை அரசாங்கத்திற்கு உண்டு எனவும் தேவையற்ற வெளித் தலையீடுகளால் அரசாங்கம் அதன் பணியைச் செய்யவிடாமல் தடுக்கப்படுகிறது என்றும் யுத்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தரப்புக்கள் இலங்கையிலுள்ள தமிழ் சமூகத்தின் பிரச்சினைகளில் உண்மையாக அக்கறை காட்டுமானால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனப் பிரச்சனைக்கான தீர்வைக் காண அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற முன்வருமாறு அழுத்தம் பிரயோகிக்கும் தரப்புக்களை ஊக்குவிப்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமை

06

2022ஆம் வருடத்தின் முதலாவது

## சட்டத்தை சபாநாயகர் சான்றுரைப்படுத்தினார்



மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக் கைப்பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன (14) தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

கடந்த 08ஆம் திகதி இந்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், திருத்தங்களுடன் இது நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதனூடாக 1981ஆம் ஆண்டு 66ஆம் இலக்க மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக் கைப் பொறுப்பு நிதியச் சட்டம் லலித் அத்துலத்முதலி மஹாபொல உயர்கல்விப்

06

தேர்தல் முறை தொடர்பில் 24ஆம் திகதி

## சகல கட்சிகளுடனும் தேர்தல் ஆணைக்குழு பேச்சுவார்த்தை




தேர்தல் முறை தொடர்பில் சகல கட்சிகளுடனும் தேர்தல் ஆணைக்குழு பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது.

அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்தப் பேச்சுவார்த்தைக்காக அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி எதிர்வரும் 24ம் திகதி இந்தப் பேச்சுவார்த்தை நடாத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அடுத்து வரும் தேர்தல் எந்த முறையில் நடாத்தப்பட வேண்டும் என்பது குறித்து கட்சிகளின் பிரதிநிதிகள் தங்களது கருத்துக்களை இதன் போது முன்வைக்கவுள்ளனர்.

## பயங்கரவாத தடை சட்டத்துக்கு எதிராக நீதிமன்றில் மனு

*Dr. பா. சரவணமுத்து தாக்கல்*

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாத தடைச்சட்டம் (தற்காலிக திருத்தம்) தொடர்பான சட்டமூலத்தில் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என தீர்ப்பு வழங்குமாறு கோரி உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திருத்த சட்டமூலத்தில் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது எனவும் அவ்வாறு அதனை நிறைவேற்ற வேண்டுமானால் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையை பெறவேண்டும் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் என்று மேற்படி மனுதாரர் அந்த மனு மூலம் உச்ச நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

மாற்றுக் கொள்கைக்கான கேந்திர நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவினால் மேற்படி மனு உச்ச நீதிமன்றத்தில் நேற்று தாக்கல்செய்யப்பட்டுள்ளது. மனுவில் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ)

## தரமான போக்குவரத்து சேவையை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

**பஸ், ரயில் சேவைகள் குறித்தும் அதிகாரிகளுக்கு விளக்கம்**

நல்லாட்சிக் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட ரயில் பெட்டிகளில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகளை நிவர்த்தி செய்து அவற்றை உடனடியாக செயற்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சு மற்றும் வாகன ஒழுங்குமுறை, பஸ் போக்குவரத்து சேவைகள் மற்றும் ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் கார் கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

கடந்த ஆட்சியில் 160 ஆசனங்களை உள்ளடக்கிய ரயில் பெட்டிகள் முன்பதிவு செய்யப்பட்டன, அதில் 120 பெட்டிகள் இதுவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 40 பெட்டிகள் தற்போது சேவையில் சேர்க்கப்பட்டுள்ளன.

சேவையில் சேர்க்கப்படாத அனைத்துப் பெட்டிகளையும் கூடிய விரைவில் பயன்படுத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பயன்படுத்தக்கூடிய ஆனால் சேவையில் ஈடுபடாத பஸ்களை சீர்செய்து குறுகிய தூர சேவையில் இணைப்பது கிராமிய மக்களின் போக்குவரத்து

06

போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள்

## நடத்துவோருக்கு எதிராக தாக்குதல்கள், கண்ணீர்ப்புகை பிரயோகிக்க வேண்டாம்

*ஜனாதிபதி அமைச்சர் வீரசேக்கரவுக்கு பணிப்புரை*

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வேலை நிறுத்தப் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை செய்வோருக்கெதிராக தாக்குதல்கள் மற்றும் கண்ணீர்ப் புகை போன்றவற்றை பிரயோகிக்க வேண்டாமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் எட்மிரல் சரத் வீரசேக்கரவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

எத்தகைய தரப்பினருக்கும் அவர்களுக்கு விருப்பமான வகையில் ஆர்ப்பாட்டங்களை செய்வதற்கு இடமளிக்குமாறு தெரிவித்துள்ள ஜனாதிபதி, அது தொடர்பில் மக்கள் தீர்மானங்களை எடுப்பார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேக்கரவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது அமைச்சர் சரத் வீரசேக்கர, ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வோர் வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டு வருவோர் ஆகியோருக்கெதிராக பொலிசார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்துள்ளார். அதற்கு பதிலளிக்கும்

06

மரத் தளபாடம் என்ற போர்வையில்

## 10 கோடியே 50 இலட்சம் பெறுமதியான சிகரட்டுகள் இறக்குமதி

**குற்றவாளியான வர்த்தகர்கள் இருவருக்கு நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மரத் தளபாடங்கள் இறக்குமதி என்ற பெயரில் 10 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை நாட்டுக்கு இறக்குமதி செய்துள்ள இரண்டு நபர்களுக்கு எதிராக நான்கு வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வர்த்தகர்கள் இருவரும் 420 இலட்சம் வெளிநாட்டு சிகரெட்டுகளை இவ்வாறு இறக்குமதி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் நடைமுறையிலுள்ள புகையிலை சட்டத்துக்கிணங்க குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் குற்றவாளிகளாக தீர்ப்பிடப்பட்டிருந்த மேற்படி இரண்டு வர்த்தகர்களுக்கும் நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனையை வழங்கி கொழும்பு மேலதிக நீதவான் துலானி அமரசிங்க தீர்ப்பளித்துள்ளார்.

சிறைத் தண்டனைக்கு மேலதிகமாக குற்றவாளிகள் இருவருக்குமாக 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ள நீதவான் தண்டப்பணம் செலுத்தத் தவறினால் மேலும் 6 மாத கால சிறைத் தண்டனை வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளதுடன் முதலாவது குற்றத்திற்காக மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனையும் அதேபோன்று இரண்டாவது குற்றத்துக்காக ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளதுடன் ஒருவருக்கு 25,000 ரூபா என்ற வீதத்தில் தண்டப் பணத்தை அறவிட நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் உதவி சுங்க அத்தியட்சகர் டீ.ஏ.எம்.ஆர். சாகர ரணசிங்க நீதிமன்றத்தில் முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

பெண் தொழில் முயற்சியாளர்களை உருவாக்க

## சகல கிராம சேவகர் பிரிவிலும் Home Shop ஆரம்பம்

**ஷம்ஸ் பாஹிம்**



சகல கிராம சேவகர் பிரிவிலும் பல்பொருள் விற்பனை நிலையங்களை Home Shop ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது,

கிராமிய மட்டத்திலான குடும்ப அலகுகளில் தொழில் முயற்சிகளுக்கு ஆர்வம் காட்டும் பெண்களை அடையாளம் கண்டு, தொழில் முனைவுகளுக்கான வழிகாட்டல் மற்றும் ஆரம்ப மூலதனத்தை வழங்குவதன் மூலம் 'ஒரு கிராமத்தில் ஒரு பெண் தொழில் முயற்சியாளரை' உருவாக்கும் நோக்கில், பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான சிறியளவிலான பல்பொருள் நிலையங்களை (Home Shop) ஆரம்பிக்கும் வேலைத்திட்டத்துக்காக 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் 15,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

இத்தொழில் முயற்சியாளர்கள் வறுமை ஒழிப்பு தொடர்பான செயலணியின் ஆலோசனையின் பிரகாரம் பிரதேச செயலாளர்களால் அடையாளம் காணப்படுவர். வியாபார நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் அரசாங்கத்தால் பெற்றுக் கொடுக்கப்படும். விற்பனைக்கான பொருட்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாக பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

விசேட அளவுகோல்களின் பிரகாரம் தெரிவுசெய்யப்படும் குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு டிஜிட்டல் அட்டை மூலம் வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ள நிவாரணப் பொதி வேலைத்திட்டத்தின் கீழ் 2,000 ரூபா பெறுமதியான உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட ஏனைய அத்தியாவசியப் பொருட்களைப் பயனாளிகள் இப்பல்பொருள் நிலையத்தின் ஊடாக நியாயமான விலையில் கொள்வனவு செய்வதற்கு

06

## நாட்டில் 100 சத வீதம் ஒமிக்ரோன் பரவியுள்ளது!

*விசேட வைத்திய நிபுணர் அன்டனி மெண்டிஸ்*

நாட்டில் 100 சத வீதம் ஒமிக்ரோன் பரவியுள்ளது. 3 தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்ட ஒருவர் கூட கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முழுமையாக தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்களால் ஒமிக்ரோன் தொற்றிலிருந்து பாதுகாப்புபெற முடியாது என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவின் விசேட வைத்திய நிபுணர் அன்டனி மெண்டிஸ் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் திங்கட்கிழமை (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்கள் கூட அதிதீவிர சிகிச்சை

06

## பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டும் போராட்டம் கொழும்பில் நேற்று ஆரம்பம்





சர்வஜன நீதி அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கருகில் இந்த போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. அந்த அமைப்பின் இணைப்பாளரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இன்று (16) காலை யாழ். பிரதான பஸ் நிலையம் முன்பாகவும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரி போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 04ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 14

### குறள் தரும் சிந்தனை



எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்

எவ்வளவுதான் வழிமுறைகளை ஆராய்ந்து தெளிந்து தேர்ந்தெடுத்தாலும், செயல்படும் பொழுது வேறுபடுகின்றவர்கள் பலர் இருப்பர்.

## டெங்கு பரவும் ஆபத்தையும் மக்கள் மறந்து விடக் கூடாது!

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை சுகாதாரத்துறை தரவுகளும் சுட்டிக்காட்டுகின்றன. 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தோற்றம் பெற்று உலகளாவிய பெருந்தொற்றாக மாறிய கொவிட் 19 தொற்றைக் கட்டுப்படுத்துவதிலும், தவிர்த்துக் கொள்வதிலும் காட்டப்படும் அக்கறை, முக்கியத்துவம் டெங்கு கட்டுப்பாடு மற்றும் தவிர்ப்பு தொடர்பில் அளிக்கப்படாதுள்ளன. அதன் விளைவாகவே தற்போது டெங்கு தீவிரமடைந்திருக்கின்றது.

நுளம்புகளால் காவிப் பரப்பப்படும் டெங்கானது கடந்த சில தசாப்தங்களாக வருடா வருடம் மழைக் காலத்துடன் சேர்த்து தீவிரமடையும் ஒரு நோயாக உள்ளது. இது மழைநீர் உள்ளிட்ட தெளிந்த நீர் தேங்கும் இடங்களில் முட்டையிட்டு பல்கிப் பெருகும் நுளம்புகளால் பரப்பப்படும் வைரஸினால் ஏற்படுத்தப்படுகின்றது.

கொவிட் 19 தொற்றைப் போன்று பரவக் கூடிய ஒரு நோயல்ல டெங்கு. என்றாலும் கொவிட் 19 தொற்று போன்று டெங்கு நோய்க்கும் காய்ச்சல் பிரதான அறிகுறியாக இருக்கும். அதேநேரம் கொவிட் 19 தொற்றை விடவும் உயிராபத்து அச்சுறுத்தல் மிக்கது டெங்கு. அதனால் ஆரம்ப கட்டத்திலேயே மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்வது இன்றியமையாததாகும்.

2020 ஆம் ஆண்டின் பின்னர் காய்ச்சல் என்றதும் பெரும்பாலானவர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறச் செல்வதைத் தவிர்த்துக் கொள்கின்றனர். ஏனெனில் வைத்தியசாலைக்குச் சென்றால் பி.சி.ஆர் அல்லது அன்டிஜன் சோதனைக்கு உள்ளாக நேரிடும். அதன் மூலம் கொவிட் 19 தொற்றுக்கு பொசிட்டிவ் ஆனால் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படும் நிலைக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று பலர் எண்ணுகின்றனர். இன்றைய நாட்களில் காய்ச்சலுக்கு சிகிச்சை பெற வைத்தியசாலைக்கு செல்லாதிருப்பதே சிறந்ததென சிலர் கருதுகின்றனர். ஆனால் இது முற்றிலும் பிழையானதாகும். காய்ச்சல் அறிகுறி வெளியானதும் ஆரம்ப கட்டத்திலேயே விரைவாகவும வேகமாகவும் சிகிச்சை பெற்றுக் கொள்ளத் தவறக் கூடாது.

பி.சி.ஆர் அல்லது அன்டிஜன் சோதனையைத் தவிர்த்துக் கொள்வதற்காக வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதைத் தவிர்த்துக் கொள்ளும் உபாயம் ஆபத்து மிக்கது. காய்ச்சலுக்கான காரணி டெங்காயின் உயிராபத்து அச்சுறுத்தலுக்குக் கூட முகம் கொடுக்க நேரிடும். நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளார்.

ஆனால் டெங்கு நோயையும் அதன் உயிராபத்து அச்சுறுத்தலையும் தவிர்த்துக் கொள்ள முடியும். அதற்கு ஆரம்ப கட்டத்திலேயே சிகிச்சை பெற்றுக் கொள்வது அவசியம். அதேநேரம், மழைநீர் உள்ளிட்ட தெளிந்த நீர் வீட்டிலும் சுற்றுச் சூழலிலும் தேங்க முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் விஷேட கவனம் செலுத்த வேண்டும். கொவிட் 19 தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு அளிக்கப்படுகின்ற முக்கியத்துவம் டெங்கு நோயைத் தவிர்த்துக் கொள்வதிலும் கட்டுப்படுத்திக் கொள்வதிலும் அளிக்கப்பட வேண்டும் என்பதுதான் தேசிய டெங்கு ஒழிப்பு இயக்கத்தினரின் கருத்தாகும்.

இந்நாடு ஒரு வளர்முக நாடாக இருப்பதால் கைவிடப்பட்ட ரின்கள், யோகட் கப்கள், குரும்பைகள், டயர்கள், உடைந்த பொருட்கள் மற்றும், பொலித்தீன் போன்ற நீர் தேங்கக் கூடிய பொருட்கள் ஒழுங்குமுறையாகக் கையாளப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படாத நிலைமை காணப்படுகின்றது. இது நுளம்புகளின் பெருக்கத்திற்கு நல்ல வாய்ப்பாக உள்ளது. அதனால் நுளம்பு பெருகத் துணைபுரியும் பொருட்களை சுற்றாடலில் இருந்து முற்றாக அப்புறப்படுத்தி அழித்து விட வேண்டும். இதற்காக கடந்த காலங்களைப் போன்று சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு காய்ச்சல் என்றால் அது கொவிட் 19 தொற்றாகத்தான் இருக்கும் என்ற எண்ணத்தையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். காய்ச்சலுக்கான காரணியைக் கண்டறிந்து மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ளத் தவறக் கூடாது. ஆகவே நுளம்புகள் பரப்பும் டெங்கு நோயைத் தவிர்த்துக் கொள்ளவும் கட்டுப்படுத்திக் கொள்ளவும் முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடனும் செயற்பட வேண்டியது மக்கள் முன்பாக இருக்கும் பாரிய பொறுப்பாகும். இதனை உணர்ந்து மக்கள் செயற்படுவார்களாயின் டெங்கு நுளம்புகள் பெருகவோ, டெங்கு நோய் அச்சுறுத்தல் ஏற்படவோ வாய்ப்பு இருக்காது.

editor.tkn@lakehouse.lk

# நேத்திரா தொலைக்காட்சியில் இன்று நவம் நோன்மதி சிறப்பு கலந்துரையாடல்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் அலைவரிசையான நேத்திரா தொலைக்காட்சியில் ஒவ்வொரு மாதமும் நோன்மதி தினத்தன்று விசேட பௌத்த கலந்துரையாடல் தமிழ்மொழியில் ஒளிபரப்பாகி வருகின்றது. இன்றைய தினம் நவம் நோன்மதி தினம் ஆகும். புத்த பகவான் ஞானம் பெற்ற பின்னர், அனைத்து பௌத்த பிக்குமாரையும் ஒன்றிணைத்து முதலாவது மகா சம்மேளனம் நடத்தப்பட்டமை இது போன்ற நோன்மதி தினத்திலாகும்.

புத்த பகவானின் பிரதான சீடர்களாக சரஜபுத்த மற்றும் மெதகொல்லன ஆகியோரை நியமித்தமையும் இது போன்ற தினத்திலாகும். புத்த பகவான் பௌத்த விழுமியங்களை உலகுக்கு உணர்த்திய தினமும் இது போன்ற நோன்மதி தினத்திலாகும்.

தமிழ் பேசும் மக்களுக்கு பௌத்த தர்மம் தொடர்பான விளக்கம் ஒன்றை வழங்கும் நோக்கிலேயே, இந்த நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பாக இடம்பெற்று வருகிறது. நோன்மதி தினத்தன்று காலை 9 மணி முதல் 11 மணிவரை நேரடி ஒளிபரப்பாக நேத்ரா தொலைக்காட்சியில் இந்நிகழ்ச்சி இடம்பெற்று வருகிறது. சில சந்தர்ப்பங்களில் அவை பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியாகவும் அமைகின்றன.




2019 நவம்பர் மாதம் 16ம் திகதி ஜனாதிபதி தேர்தல் வெற்றிக்குப் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் பல்வேறு மத நல்லிணக்க செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஓகஸ்ட் 5 ஆம் திகதி இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மாபெரும் வெற்றியை பதிவு செய்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பாண்மையுடன் ஆட்சியமைத்தது. அதன் பின்னர் மீளவும் பிரதமராக பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷவின் நேரடி நிர்வாகத்தின் கீழ் புத்த சாசன அமைச்சு வந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

புத்த சாசன,மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி வகிக்கின்றார். ஒரு மதம் பற்றி ஏனைய சமூகங்களுக்கு அந்த சமூகங்களின் மொழிகளில் இலகுநடையில் வழங்கும் போது நல்லிணக்கம் ஏற்படுகிறது. மேலும் மதங்கள் பற்றிய பல சந்தேகங்களும் முரண்பாடுகளும் நீங்குகின்றன. நோன்மதி தினத்தின் வரலாற்றுச் சிறப்பு, பௌத்த தர்மம், பஞ்ச சீலம் தொடர்பான விளக்கம், தியானம் மற்றும் தானங்கள் பற்றிய விளக்கம், புத்த பகவானின் வாழ்க்கைச் சரித்திரம் உட்பட பல விடயங்கள் உள்ளடங்குகின்றன. இந்த நிகழ்ச்சியில் தமிழ் பேசும் பௌத்த பிக்கு மூலம் பௌத்த தர்மம் குறித்த விளக்கம் இலகு தமிழில் வழங்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

புத்த சாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடக செயலாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஜெயரஞ்ஜன் யோகராஜ் அமைச்சின் சார்பில் கலந்து கொண்டு நிகழச்சியை தொகுத்து வழங்குகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் நவம் நோன்மதி தினமான இன்றும் விசேட ஒளிபரப்பு இடம்பெறுகிறது.நவம் நோன்மதி தினம் பற்றிய அறிமுகம், அதன் சிறப்பு,பௌத்த தர்மம், புத்த பகவானின் போதனைகள் மற்றும் வரலாறு தொடர்பில் சிறந்த விளக்கங்களை முந்தலம,மங்கள எலிய, ஸ்ரீதேவ்ராம் விகாரையின் பொறுப்பாளர் சங்கைக்குரிய திருநெல்வேலி போதி தம்ம அரவணடிகள் வழங்குவார். இன்றைய தினம் காலை 9 மணி முதல் 10.00 மணி வரை இந்த விசேட உரையாடல் இடம்பெறுகிறது.

# நாமல் உயன வனத்தை கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வந்த சூழல்நேயன் ராகுல் தேரர்

"உலகில் நல்ல ஒட்சிசனை உற்பத்தி செய்யும் இடத்தை உலகுக்கு அறிமுகம் செய்து அதை நிர்வகிக்க எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தமை நான் முற்பிறவியில் செய்த புண்ணியமாகும். 'தேசிய நாமல் உயன' எனக் கூறப்படுவது தூய்மையான ஒட்சிசனை உற்பத்தி செய்யும் காடாகும். இந்தக் காடு தான் எனது வாழ்க்கை. இந்த இயற்கை அன்னையைப் பாதுகாக்கவே நான் பிறவி எடுத்துள்ளதாக எண்ணுகிறேன். எனது இறுதி மூச்சையும் இந்த வனத்திலேயே விடுவதற்கு கிடைத்தால் அது எனக்குப் போதும்.



இவ்வாறு தேசிய நாமல் உயனவை 37 வருட காலம் பாதுகாத்துள்ள ராகுல் தேரர் தனது கடந்த கால அனுபவங்களை விபரித்தார்.

தனது இனத்துக்காக நிறைவேற்ற வேண்டிய கடமைகளை சரியான முறையில் நிறைவேற்றியதால் தான் தற்போது நிம்மதியாக காட்டில் ஒரு மரத்தடியில் கூட மரணிக்க முடியுமென அவர் தெரிவித்தார். 'தேசிய நாமல் உயன' எனப்படுவது இனத்தின் உரிமையாகும். ராகுல தேரர் நாமல் உயனவுக்கு வருவதற்கு முன்னர் அக்காலத்தில் அந்த வனத்தை 'நாக மரங்களின் காடு' எனக் கூறினார்கள். யாருக்கும் அந்தக் காட்டின் அருமை தெரிந்திருக்கவில்லை. ஒரு சரித்திரத்தையே மூடி மறைத்திருந்த அந்தக் காட்டை அநேகமானோர் சாதாரண நாகமரக் காடு என்று மாத்திரமே எண்ணியிருந்தார்கள்.

உலகில் மிகவும் அருகி வரும் இளஞ்சிவப்பு பளிங்குப் படுக்கையை அந்தக் காலத்தில் பிரதேசவாசிகள் 'உப்புக் கல்' என்றே குறிப்பிட்டார்கள். இதுபற்றிய உலகத்தின் கவனம் ராகுல தேரர் அங்கு சென்றதன் பின்னரே ஏற்பட்டது. அது சாதாரணமாக நடந்த ஒன்றல்ல. அந்நடவடிக்கைகளின் போது ராகுல தேரர் மிகவும் அவமதிப்புக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளாக நேரிட்டது. அச்சுறுத்தல் மிரட்டல்களுக்கு உள்ளானார்.

ஆனால் அவை எவற்றாலும் ராகுல தேரரை அசைக்க முடியாமல் போனது. பிறப்பிலேயே மிகவும் மெலிந்த உடலைக் கொண்ட ராகுல தேரர், நாமல் உயனவைப் பாதுகாக்க அசுரர்களோடு மோதினார். இறுதியில் அவர்கள் இவரின் காலடியில் மண்டியிட்டார்கள்.

"அன்றிலிருந்து காடழிப்பவர்களுக்கு என்னை பிடிக்காமல் போனது. மரம் வெட்டுபவர்களை சந்தித்தால் முதலில் அவர்களுக்கு நல்ல விதமாக எடுத்துச் சொல்வேன். அநேகமானோர் நான் கூறுவதை கேட்டு திரும்பிச் சென்று விடுவார்கள். ஆனால் ஒரு நாள் நல்ல வேலையொன்று நடந்தது. ஒரு குழுவினர் மரம் வெட்டுவதற்காக காட்டிற்கு வந்தார்கள். நான் மரத்தை வெட்ட வேண்டாம் என்று கூறினேன். ஆனால் அவர்கள் கேட்கவில்லை. என்னுடன் விவாதிக்கத் தொடங்கினார்கள்.

என்னை பயமுறுத்தப் பார்த்தார்கள். நான் பயப்படவில்லை. ஒரு மரத்தில் கூட கையை வைக்க விடவில்லை. அந்த அணியில் இருந்த ஒருவன் என் அருகில் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு வந்து 'காவியுடை இல்லாவிட்டால் நான் உங்களை அறுப்பேன்' என்று கூறினான். அன்று நான் அவர்களுக்கு நல்ல பாடம் ஒன்றை கற்பித்தேன் போதும் போதும் என்று கூறுமளவிற்கு. நான் அனைவரையும் காட்டுமர கட்டையால் தாக்கினேன். இறுதியில் 'முடியுமானால் உங்கள் தலைவனையும் வரச் சொல்லுங்கள்' என்று கூறினேன்.

தலைவன் வரவில்லை ஆனால் சிஷ்யன் ஒருவனை 5000 ரூபாவை கொடுத்து என்னை கொல்வதற்காக அனுப்பியிருந்தார். காட்டில் மரங்களை வெட்டுவது அப்பாவி மக்கள் அல்ல. வியாபாரிகளே வெட்டுகின்றார்கள்".

காட்டைப் பாதுகாக்க அவர் முகம்கொடுத்த அனுபவங்களை அவ்வாறு விபரித்தார்.

நாமல் உயன காட்டு விலங்குகள் நிறைந்த வனமாகும். இது விசேடமான சூழல்தொகுதியை கொண்டது. சில மனிதர்களால் அவர் பாதிக்கப்பட்டிருந்தாலும் காட்டு விலங்குகளால் ஒருபோதும் அவர் பாதிப்படையவில்லை.

"நான் நாமல் உயனவுக்கு வந்து முதலில் அமர்ந்தது மலைப்பாம்பு ஒன்றின் முதுகிலாகும். நான் நடந்து வந்த களைப்பின் காரணமாக நாமல் உயனவில் உள்ள கற்பாறை ஒன்றின் மேல் அமர்ந்தேன். நான் மெத்தை ஒன்றின் மேல் அமர்ந்து இருப்பது போன்று உணர்ந்தேன். அத்துடன் ஏதோ விலங்கு ஒன்று மூச்சுவிடும் சத்தமும் கேட்டது. எனக்கு சந்தேகம் வந்தது. நான் அந்த இடத்தில் இருந்து எழுந்து சிறுதடி ஒன்றால் அந்த இடத்தை விலக்கி பார்த்தேன். அப்போதுதான் நான் அமர்ந்திருந்தது ஒரு மலைப் பாம்பின் மீது என்று கண்டேன். என்னால் அந்த பிராணிக்கு ஏதும் பிரச்சினை ஏற்படவில்லை. பிராணியிடமிருந்து எனக்கும் எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால் அன்று நான் இரண்டு கால் மனிதர்களுடன் வாழ்வதை விட இந்தக் காட்டில் உள்ள விலங்குகளுடன் வாழ்வது நல்லது எனத் தீர்மானித்தேன்".



**பலத்த எதிர்ப்புகளையும் முறியடித்து, பெரும் காடொன்றை பாதுகாத்துள்ள தனது இலட்சியம் நிறைவேறி விட்டதாக பெருமிதம் கொள்கின்றார்**



இவ்வாறு தான் காட்டுக்கு வந்த முதல் நாள் அனுபவத்தை எம்மிடம் அவ்வாறு ஞாபகப்படுத்தினார் அவர். "ஒருநாள் மாலையில் முச்சக்கரவண்டி ஒன்றில் போகும் போது திடீரென காட்டின் நடுவில் இருந்து யானை ஒன்று பாய்ந்தது. யானை முச்சக்கர வண்டியை மிதித்து துவம்சம் செய்தது. எனது ஆசிரமம் அரை கிலோ மீட்டர் தூரத்திலேயே காணப்பட்டது. எவ்வாறாயினும் நான் ஒவ்வொரு நாளும் உணவளிக்கும் நாய்கள் கூட்டமொன்று இருந்தது. அந்த நாய்கள் கூட்டம் எவ்வாறு அந்த இடத்துக்கு வந்தது என்றே தெரியவில்லை. யானையை குரைத்தே விரட்டியடித்தன.

நான் இயற்கையன்னையை காப்பாற்றுவது போல இயற்கை அன்னையும் என்னை காப்பாற்றுகிறாள் என எண்ணுகிறேன்".

ராகுல தேரர் காட்டுயானையிடம் இருந்து அவ்வாறே தப்பினார். தனது உயிரைப் போல் பாதுகாத்து வந்த நாமல் உயனவை அவர் கையளித்துள்ளார். அது தொடர்பான அனைத்து அசையும் அசையா சொத்துக்கள் அனைத்தையும் கையளித்துள்ளார். அவர் மத்திய கலாசார நிதியத்திற்கு சட்டபூர்வமாக ஒப்படைத்துள்ளார். அது எதிர்கால பரம்பரைக்காக நாமல் உயனவை பாதுகாப்பதற்காகவாகும்.

"எனக்கு எந்த நேரத்திலும் ஒரு மரத்தடியில் கூட மரணிக்க முடியும். எனக்கு சொத்துக்கள் இல்லை.வங்கிக் கணக்குகள் இல்லை. எனது பையையும் குடையையும் எடுத்துக் கொண்டு சுதந்திரமாக நான் வெளியேற முடியும். தற்போது எனக்கு எதுவித பாரமும் இல்லை. ஆரம்பத்தில் இந்த பிரதேசத்தில் அநேகமானோர் நான் இந்தக் காட்டை ஆக்கிரமித்தவன் என எண்ணினார்கள். மூட்டை கட்டி சேர்க்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. என்னை அவமானப்படுத்தியவர்கள், என் மீது குற்றம் சுமத்திவர்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன். உங்கள் இதயத்தை தட்டிப் பாருங்கள் நீங்கள் இந்த நாட்டுக்கு, குறைந்தபட்சம் ஊருக்கு செய்துள்ள சேவை என்ன? அடுத்தவர்களின் சேவையை விமர்சனம் செய்வதற்கு முன்னர் தாங்கள் சேவைகளை செய்துள்ளார்களா என தங்களிடமே கேட்க வேண்டும். பிக்குவாக எனது கடமையை முடிந்தளவு மேற்கொண்டுள்ளேன். நாமல் உயன இன்று உலகெங்கும் பிரசித்தம் பெற்றுள்ளது.

இன்று உலகின் பல நாடுகளிலிருந்தும் நாமல் உயனவை காண வருகிறார்கள். அன்று நான் பல சிரமங்களுடன் இந்தக் காட்டை பாதுகாத்ததனால் இன்று அது நாட்டுக்கு அந்நிய செலாவணியை பெற்றுத் தரும் இடமாக மாறியுள்ளது. நான் இல்லாத காலத்திலும் நாமல் உயனவை பார்க்கின்றவர்களுக்கு எனது சேவை ஞாபகத்தில் வரும்" என்கிறார் அவர்.

ராகுல தேரரின் குரல் கடினமானது. ஆனால் பிறரின் துயரத்தில் உதவிபுரியும் மனம் அவரிடம் காணப்பட்டது. சிலர் அவரை திம்புலாகல தேரருக்கு ஒப்பானவர் என கூறுவார்கள். "இன்று நான் இன்னொரு விதத்தில் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் நாமல் உயனவுக்கு ஆரம்பத்தில் வந்த காலத்தில் எனக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்திய, எனக்கு எதிராக மனுக்கள் அளித்த, என் மீது அவதூறு கூறி பத்திரிகை அடித்த சில மனிதர்களின் பிள்ளைகளுக்கு நாமல் உயன திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுக்க முடிந்ததை யிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்"



என்று ராகுல் தேரர் கூறினார்.

நாமல் உயன பாரம்பரியமிக்க அவுக்கண ,தம்புள்ளை, இப்பன்கட்டுவ ,கலாவெவ போன்ற இடங்களுக்கு மத்தியில் அமைந்துள்ளதால் நாமல் உயனவின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளது. ராகுல தேரர் முகாமைத்துவத்தில் திறமையானவர். அரச நிறுவனம், விகாரை மற்றும் வேறு நிறுவனங்களை முகாமைத்துவம் செய்வது எவ்வாறு என்பது பற்றி ராகுல தேரரை எடுத்துக்காட்டாக கொள்ளலாம். மூன்று தசாப்த காலமாக அவர் தேசிய நாமல் உயனவை சரியான முறையில் முகாமைத்துவம் புரிந்து வந்தார்.

என்னால் இந்த பயணத்தை இவ்வளவு வலுவாக கடந்து வர இந்த நாட்டிலுள்ள அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பே காரணம். திவயின பத்திரிகை போன்று லங்காதீப, தினமின, ரிவிர, லக்பிம உட்பட சிங்கள, ஆங்கில அனைத்துப் பத்திரிகைகளும் எனக்கு ஒத்துழைப்பு வழங்கின. இச்சந்தர்ப்பத்தில் நான் மிகவும் கௌரவத்துடன் அதனை நினைவு கூருகின்றேன். சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியரான எட்மன்ட் ரணசிங்க உள்ளிட்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். நான் கண்களை மூடுவதற்கு முன்னர் நாமல் உயனவுக்காக மனதில் உள்ள ஒரு விடயத்தை செய்ய விரும்புகிறேன். இளஞ்சிவப்பு பளிங்குப் படுகையை காண்பதற்கு கேபிள் கார் திட்டமொன்றை ஆரம்பிப்பதாகும். அது வெற்றி பெற்றால் நாட்டிற்கு மேலும் அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்ள முடியும் என நான் எண்ணுகிறேன். ஜனாதிபதி இது குறித்து கவனம் செலுத்துவார் என நான் எண்ணுகிறேன்.

நாட்டில் சுற்றுலாத் துறையை மேலும் மேம்படுத்த அது ஒரு காரணமாக அமையும். மரங்களை நடுவது போன்று காடுகளை பாதுகாப்பதும் இரவு பகல் புண்ணியத்தை அளிக்கும் என பௌத்த நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த புண்ணியத்தை செய்து இன்று நான் மகிழ்ச்சியுடன் உள்ளேன்".

நாட்டிற்கு, உலகிற்கு பெறுமதிவாய்ந்த சூழல் தொகுதி ஒன்றை அறிமுகம் செய்து அதனை பாதுகாத்த ராகுல தேரர் இன்று அவ்வாறு மகிழ்ச்சி அடைகிறார்.

தமிழில்:
**வீ.ஆர்.வயலட்...**

# அமரர் எஸ்.டி. சிவநாயகம் நூறாவது பிறந்தநாள் நிகழ்வுகளை சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகள்

**இலங்கை பத்திரிகைத் துறையின் பொன்விழா நாயகனும், சத்திய சாய் பாபா மத்திய நிலைய ஸ்தாபகரும், தொடர்ந்து இருபத்தைந்து வருடங்கள் அதன் தலைவராக செயற்பட்டு சாய் நிலையத்தை வழிநடத்தியவருமான அமரர் எஸ்.டி. சிவநாயகம் அவர்களின் நூறாவது ஆண்டு பிறந்த நாள் நிகழ்வுகளை இவ்வருடம் சிறப்பாக நடத்துவதற்கு அவரது ஞாபகார்த்த குழு ஏற்பாடுகளை செய்து வருகின்றது.**



அதன் முன்னோடி நிகழ்வாக எஸ்.டி.சிவநாயகம் ஞாபகார்த்த முத்திரையை பெப்ரவரி 16ஆம் திகதியான இன்று புதுச்செட்டிதெரு சாய் மத்திய நிலையத்தில் வெளியிடுவதற்கு இலங்கை முத்திரைப் பணியகம் ஏற்பாடு செய்து வருகின்றது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வெ. இராதாகிருஷ்ணனின் வழிகாட்டலில் மூத்த பத்திரிகையாளர் எச்.எச்.விக்கிரமசிங்க அண்மையில் ஊடகத் துறை அமைச்சர் டலஸ் அலகப்பெருமவை அமைச்சில் சந்தித்து அமரர் எஸ்.டி.சிவநாயகத்தின் ஊடகப்பணி மற்றும் ஆன்மீகப் பணி என்பன குறித்து நன்கு விளக்கிக் கூறினார். அதைத் தொடர்ந்து அமைச்சர், முத்திரை வெளியிடுவதற்கான பணிப்புரையை தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்னவுக்கு எழுத்து மூலம் வழங்கினார்.

அமரர் சிவநாயகம் இ.தொ.காவின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றை விரிவாக எழுதியவராவார். 1966 இல் தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளை ஆரம்பித்து அதன் பிரதம ஆசிரியராக பணியாற்றியவர். தினகரன் பத்திரிகையின் மூலம் தன் பத்திரிகைப் பணியை ஆரம்பித்த இவர் சுதந்திரன், வீரகேசரி, சூடாமணி பத்திரிகைகளின் ஆசிரியராகவும் சுமார் ஐம்பது வருடம் ஊடகப் பணியாற்றியவர். அவர் பிறந்து நூறு ஆண்டுகள் கடந்தும் காத்திரமான அவரது படைப்புக்கள் நூல் உருப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மலையக எழுத்தாளர் மன்றம் 1963 ஆம் ஆண்டு உருவாக பல்வேறு ஆலோசனைகளை வழங்கியதோடு, இலங்கையின் முன்னணி பல எழுத்தாளர்கள் உருவாக காரணமாக இருந்த மூத்த பத்திரிகையாளர் அவராவார்.

அன்னாரின் ஞாபகார்த்த முத்திரை விற்பனை மூலம் கிடைக்கும் நிதி தற்போது புதுச்செட்டித்தெரு சாய் நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இராஜகோபுர பணிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நினைவு முத்திரையை வெளியிடுவதற்கான பணிப்புரைப் பத்திரத்தில் அமைச்சர் டளஸ் அழகப்பெரும கையெழுத்திட்ட போது...

## ஞாபகார்த்த குழுவின் முயற்சியின் பலனாக அரசினால் இன்று நினைவு முத்திரை வெளியீடு

எச்.எச். விக்ரமசிங்க

# கிழக்கதனில் உதித்ததனால் ஒளியைத் தந்தோன்



உலகமெலாம் போற்றுகிற உயர்ந்த ஆற்றல்
ஒப்பற்ற ஆளுமையின் வடிவு என்றே
பலர் புகழும் பெருமையினைக் கொண்ட நல்ல
பண்பாளன் எஸ்.ரி.எஸ். பாரை வென்றோன்
நிலமுழுதும் நேசித்து அன்பால் நல்ல
நேர்மையுடன் செயற்பட்ட நிமிர்ந்த ஆசான்
வளமிகுந்த தன்னுடைய எழுத்தால் இந்த
வையமெலாம் காத்திடவே வழிகள் செய்தான்.
எவருக்கும் அஞ்சாமல் உண்மைதன்னை
எழுதியதால் பெரும் புகழை ஈட்டிக் கொண்டோன்
இவருக்கு நிகரே யார் என்றே ஏத்த
எப்புகட்கும் ஆளாகாதிருந்த ஐயன்
தவறுக்குத் துணைபோகா தனித்த தன்னின்
தாளாத நிமிர்வாலே தனித்து நின்றோன்
நவமான தன்னுடைய எழுத்தால் மட்டும்
நானிலத்தை ஆண்டுபெரும் புகழைக் கொண்டோன்
ஒப்பற்ற தனியாற்றல் தன்னால் இந்த
உயர் புகழை ஈட்டியவன் ஓர்ந்து நல்ல
தப்பற்ற ஆற்றல்களை தனியே கண்டு
தரணியிலே அவற்றையெலாம் மிளிரச்செய்தோன்
எப்பற்றும் இல்லாமல் இயங்கி நின்றோன்
ஏற்றமுற தமிழ்த்தாய்க்குப் பணிகள் செய்தோன்
வெப்புற்ற எதிரிகளும் போற்றும் நல்ல
வீறான புலமையதால் உயர்ந்து நின்றோன்.
கிழக்கதனில் உதித்ததனால் ஒளியைத் தந்து
கிளர்ந்தீழத் தமிழரினம் உயரச் செய்தோன்
பலரும் இவன் எழுத்தைக் கண்டேங்கி நின்று
பத்திரிகை உலகிற்கோர் பகலோன் என்று
தலையதனில் கரங்கூப்பி வணங்கி நின்றார்
தாழ்பணிந்து அவன்தனையே புகழ்ந்து நின்றார்
கலைகளெலாம் கற்றுயர்ந்து கனிந்து நின்ற
காவலனின் நூற்றாண்டு கண்டோம் வாழி!
மதுரையிலே மாநாடு நடந்த போது
மாண்புடனே என் உரையைக் கேட்டுள்வாங்கி
நிதம் அதனின் பெருமைதனை ஊரார் காண
நிமிர்ந்தெழுதி எனை உயர்த்தி வைத்த நாதன்
இதமுடனே எனையும் தன் மைந்தனாக
ஏற்றங்கள் செய்தேதான் வாழச் செய்தோன்
பதமலர்கள் தலை சூட்டிப் பணிந்து நின்றேன்
பண்பாளன் புகழதனைப் பாடி நின்றேன்.
கம்பனுக்கு கொழும்பில் ஒரு விழாவைச் செய்யக்
காட்டியவன் கனிவுடனே துணைகள் செய்தான்
தம் பெரிய புகழதனைக் கொண்டு எங்கள்
தமிழ் விழாவை உலகறியச் செய்த ஐயன்!
அம்புவியில் தமிழ் சுவைக்க அவரைப் போல
ஆர் உள்ளார்? அணுவுக்குள் அணுவாய் நின்று
தெம்பதனைத் தந்தேதான் தேற்றி வைத்த
தெய்வத்தை எந்நாளும் மறக்கப்போமோ?
சாயி அவன் திருவடியில் சரிந்து நின்று
சகமெல்லாம் நேசித்த பெரியோன் நல்ல
பாயிரமாய் எம் தம்மை விளக்கம் செய்து
பாரெல்லாம் புகழ் வளர்க்கத் துணையாய் நின்றோன்
ஆயிரமாய் வார்த்தைகளை அடுக்கினாலும்
ஐயன் சிவநாயகத்தின் அருமை தன்னை
வாயிருந்து வார்த்தைகளால் சொல்லப்போமோ?
வானிருந்து தெய்வமதாய் வாழ்த்தி நிற்பான்



கம்பவாரிதி
இலங்கை ஜெயராஜ்...

# மலையகத்துக்கு தனித்துவ அடையாளம் தந்த இலக்கியவாதி தெளிவத்தை ஜோசப்

**பிரபல எழுத்தாளரான தெளிவத்தை ஜோசப் தனது 88 ஆவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகின்றார். சந்தனசாமி ஜோசப் என்ற இயற்பெயர் கொண்ட இவர் 'தெளிவத்தை ஜோசப்' என்ற பெயரில் இலங்கையில் மாத்திரமன்றி தமிழ் கூறும் உலகெங்கும் நன்கு அறியப்பட்ட எழுத்தாளராவார்.**

பெப்ரவரி 16, 1934இல் பிறந்த தெளிவத்தை ஜோசப் இலங்கையின் சிறந்த சிறுகதை மற்றும் நாவலாசிரியராக விளங்குகின்றார். அவர் சிறந்த இலக்கிய ஆய்வாளர் ஆவார். இலங்கையின் மலையகப் படைப்பாளிகளில் முக்கியமான ஒருவராக இலக்கிய உலகில் போற்றப்படுகின்றார்.

அறுபதுகளில் எழுதத் தொடங்கி எழுபதுகளில் இலக்கிய உலகில் தனித்துவம் மிகுந்த படைப்பாளியாக மலர்ந்தவர் அவர்.இலக்கியத்துறைக்காக தனது வாழ்வை அர்ப்பணித்த எழுத்தாளராக அவர் புகழப்படுகின்றார்.

தெளிவத்தை ஜோசப் பதுளை மாவட்டத்தின் ஹாலி எல இற்கு அருகில் உள்ள ஊவாக்கட்டவளை என்ற இடத்தில் பிறந்தார். மூன்று ஆண்டுகள் தமிழ்நாட்டில் கும்பகோணம் லிட்டில் பிளவர் உயர்நிலைப் பாடசாலையில் படித்து விட்டு மீண்டும் இலங்கை திரும்பி பதுளை சென் பீட்டர்ஸ் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார்.

இவர் ஆரம்பத்தில் தெளிவத்தை என்னும் தோட்டத்தில் ஆசிரியராக இருந்தவர். இதன் காரணமாகவே தனது பெயருடன் தெளிவத்தையையும் இணைத்துக் கொண்டார். அவரது உயிர் மூச்சே இலக்கியம் ஆகிப் போனது.

'காலங்கள் சாவதில்லை' என்பது இவருடைய முக்கியமான நாவல். 'நாமிருக்கும் நாடே' சிறுகதைத் தொகுதிக்காக இலங்கையில் சாகித்திய விருது பெற்றுள்ளார். இவரது 'குடை நிழல்' என்ற நாவல் 2010 ஆம் ஆண்டுக்கான யாழ் இலக்கிய வட்டத்தின் இலங்கை இலக்கியப் பேரவை விருதைப் பெற்றுள்ளது. தெளிவத்தை ஜோசப் 2013 ஆம் ஆண்டுக்கான விஷ்ணுபுரம் இலக்கிய விருதைப் பெற்றார். அவரது நூல்களில் சில பின்வருமாறு:

## இன்று 88 ஆவது பிறந்த நாள் கொண்டாடும் படைப்பாளிக்கு இலக்கிய உலகம் வாழ்த்து



காலங்கள் சாவதில்லை (1974, நாவல், வீரகேசரி வெளியீடு), நாமிருக்கும் நாடே (1979, சிறுகதைகள், வைகறை வெளியீடு), பாலாயி (1997, மூன்று குறுநாவல்கள், துரைவி வெளியீடு), மலையக சிறுகதை வரலாறு (2000, துரைவி வெளியீடு), இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியலும் இலக்கியமும் (அச்சில், மூன்றாவது மனிதன் வெளியீடு), குடை நிழல் (புதினம், 2010), இலக்கியத்துறைக்கு அப்பால் தெளிவத்தை ஜோசப் அருமையான மனிதர், பண்பாகப் பழகுபவர், பழகுவதற்கு இனியவர். சிறுகதையாளர், நாவலாசிரியர், விமர்சகர், இலக்கிய ஆய்வாளர். இலங்கையின் மலையகப் படைப்பாளிகளில் முக்கியமான ஒருவர் என்பது மட்டுமன்றி ஏராளமான இலக்கிய அன்பர்களை தன்வசம் கொண்டுள்ளவர் அவர்.

அறுபதுகளில் இலங்கையில் ஏற்பட்ட கலை இலக்கிய அரசியல் மாற்ற காலத்தில் எழுதத் தொடங்கியவர். எழுபதுகளில் இலக்கிய உலகில் தனித்துவம் மிகுந்த படைப்பாளியாக மலர்ந்தவர். இலக்கியத்துறையைப் பொறுத்தவரை தனக்கென ஒரு அடிப்படை இலட்சியத்தைக் கொண்டவர்.

மலையகம் என்ற மண்ணுக்கு, அதன் தனித்துவத்திற்கு, அந்த உணர்வுக்கு உருவம் கொடுத்தவர் தெளிவத்தை ஜோசப். தோட்டத்தொழிலில் சிரமத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் தொழிலாளிகளின் வாழ்வை படம் பிடித்துக் காட்டும் வல்லமை கொண்டதாக இவரது படைப்புகள் அமைந்துள்ளன.

பிரபல எழுத்தாளராக இருந்தாலும் ஏனைய படைப்பாளர்களின் படைப்புகளை வெளிக்கொணர்வதிலும் தமது பங்களிப்பை வழங்கி வந்துள்ளார். வளர்ந்து வரும் எழுத்தாளர்கள் முதல், உறுதியான தடத்தைப் பதித்துக்கொண்டவர்கள் வரை அனைவரையும் வெளி உலகிற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் திரட்டிக் கொடுத்தவர் தெளிவத்தை ஜோசப்.

இலக்கிய செம்மல், கலாபூஷணம், அரச சாகித்திய விருது, சம்பந்தன் விருது, இலக்கிய விருது, இராமகிருஷ்ணா கமல நாயகி தமிழியல் விருது, தமிழியல் வித்தகர் பட்டம், பாரதி விருது, மக்கள் எழுத்து வேந்தன், இலக்கிய சாதனையாளர் விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது உட்பட ஏராளமான விருதுகளை பெற்றுள்ளார் தெளிவத்தை ஜோசப்.

பிறந்த நாளை இன்று கொண்டாடிக் கொண்டிருக்கும் இலக்கியவாதி தெளிவத்தை ஜோசப் பல்லாண்டு காலம் தேக ஆரோக்கியத்துடன் வாழ வேண்டுமென தினகரனும் வாழ்த்துகின்றது.

# மலையக கல்வித்துறையில் விழிப்புணர்வை ஏற்படுத்திய அமரர் பாலசுப்பிரமணியம்

**மலையகத்தின் கல்வித்துறைக்கு பெரும் சேவையாற்றிய எஸ்.பாலசுப்பிரமணியம் அவர்களுக்கான ஞாபகார்த்த நிகழ்வு இன்று (16.02.2022) பதுளை தமிழ் மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெறுகின்றது. கல்விமாணி கற்கைநெறி (2017/2020) ஆசிரியர் மாணவர்களும் கல்விச் சமூகத்தினரும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர். இந்நிகழ்வில் நினைவஞ்சலி உரை, கவிதாஞ்சலி நிகழ்வு, மரநடுகை, வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பகிர்ந்தளித்தல் ஆகியனவும் இடம்பெறுகின்றன.**



மலையகத்தின் மாணவர்கள் பல ஏக்கத்துடன் நினைவு கூருகின்ற ஓர் ஆசானாக சுந்தரம்பிள்ளை பாலசுப்ரமணியம் திகழ்கின்றார். இவரால் பட்டை தீட்டப்பட்ட பலர் கல்விமான்களாக அரச, தனியார் துறைகளில் இன்று சிறந்து விளங்குகின்றார்கள்.

பாலசுப்ரமணியம் அவர்களால் மலையக கல்வித்துறைக்கு ஆற்றப்பட்ட சேவை அளப்பரியது. இவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இன்றைய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மலையகக் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக திகழ்ந்தவர்களுள் பாலசுப்பிரமணியம் முக்கியமானவராவார். இவர் மலையக மண்ணுக்கு பெருமை தேடித் தரும் மாணவர்களை உருவாக்குவதற்கு தமது அயராத உழைப்பை வழங்கியுள்ளார். அவர் எண்ணப்படியே அவர் வழிகாட்டி உயர்த்திய மாணவர்கள் இன்று பல துறைகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றனர்.

இம்மாணவர்களது பல்துறை வளர்ச்சியானது அவர் இல்லாவிடினும் அவரது பெருமை, உழைப்பு,முயற்சி அனைத்தையும் பறைசாற்றுகின்றமை பெருமைக்குரிய விடயமே ஆகும்.

பண்டாரவளை அம்பிடிகந்த தியகலயில் சுந்தரம்பிள்ளை_ செல்லம்மாள் தம்பதியினருக்கு 1955 ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஒன்பதாம் திகதி அவர் மகனாகப் பிறந்தார். அம்பிடிகந்த தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்ற இவர், உயர்கல்வியை பண்டாரவளை புனித ஜோசப் கல்லூரியில் கற்றார்.

பாடசாலையில் தமது திறமைகளை வெளிக்காட்டிய சிறந்த மாணவராத் திகழ்ந்தார். யாழ்.பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலை பட்டம் பெற்று மலையக மண்ணுக்கு பெருமை சேர்த்தார்.

பாலசுப்பிரமணியம் அவர்கள் தமது பட்டப்படிப்பை தொடரும் போதே நண்பர்களுடன் இணைந்து மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவினார். ஒன்பது பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் பிறந்த இவர் குடும்பப் பொறுப்புகளை சுமந்து நிறைவேற்றியதுடன் தனது கடமைகளையும் செவ்வனே செய்து முடித்தார். வையாபுரி சரஸ்வதி என்பவரை மணம் முடித்து இல்லற வாழ்க்கையையும் இனிதாகவே வாழ்ந்தார். தனது பாரியாரின் கல்விப் பணிக்கும் உறுதுணையாகவே செயற்பட்டார்.

பண்டாரவளை சென்.தோமஸ் கல்லூரியில் இரு வருட கால ஆசிரியர் பணியை மேற்கொண்டதுடன் 1982_1991 இல் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக, கடமையாற்றியுள்ளார். பின்னர் ஆசிரிய ஆலோசகராகவும் தமது பணியை முன்னெடுத்துச் சென்றுள்ளார்.

பாலசுப்ரமணியம் ஊவா மாகாணத்தில் ஆசிரியர் சங்கக் கிளைகளை உருவாக்கியதோடு அதனுடன் இணைந்து செயல்பட்டதில் பல வெற்றிகளையும் கண்டார். பதுளையில் கல்விமாணி கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டது, ஆசிரிய ஆலோசகர் குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டது, பதுளையில் வினாத்தாள் மதிப்பீட்டு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இவை அனைத்தும் நிகழ்ந்தது இவர் உருவாக்கிய ஆசிரியர் சங்கங்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமையவே ஆகும்.

பாராளுமன்ற உறுப்பினரான மறைந்த வேலாயுதம் அவர்களின் உதவியுடன் பசறையில் தமிழ்ப் பிரிவுக்கான ஆசிரியர் மத்திய நிலையத்தை உருவாக்கியதோடு, அதன் முகாமையாளராகவும் பொறுப்பேற்று செயற்பட்டார்.

மலையக மண்ணின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டு செயற்பட்டார் என்று கூறுவது சாலப் பொருத்தம். அது மட்டுமன்றி சமுக சேவைகளிலும் ஈடுபட்டுளளமை குறிப்பிடத்தக்கது.

கல்விமாணி கற்கைநெறியின் சிரேஷ்ட விரிவுரையாளராக, பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் இணைப்பாளராக இறுதிவரை செயற்பட்டு ஊவா மாகாண தமிழ் கல்வி சமூகத்திற்கு அரும்பணியாற்றிய ஆசான் 2019 ஜூலை மாதம் 20ஆம் திகதி சமூகத்தை மீளாத்துயரில் விட்டுச் சென்று விட்டார் . காலம் உள்ளவரை அவரது நாமம் எம்மவர் மத்தியில் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

## பதுளை தமிழ் மகளிர் மகாவித்தியாலயத்தில் இன்று ஞாபகார்த்த நிகழ்வு

நடராஜா மலர்வேந்தன்...
(லுணுகல நிருபர்)

## நாட்டில் 100 சத வீதம்... 03ஆம் பக்கத் தொடர்

பிரிவில் அனுமதிக்கப்படுகின்றனர். கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் மூன்று கட்ட தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்ட ஒரு தொற்றாளர் சிகிச்சை பெற்று வருகின்றார். எனினும் இவர் நீண்ட காலமாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவராவார்.

எவ்வாறிருப்பினும் இவர் மூன்று தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டுள்ளமையால் கொவிட் 19 தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்புவார் என்று நாம் நம்புகிறோம். ஒமிக்ரோன் வைரஸ் பலவீனமானது என்று சிலர் எண்ணுகின்றனர். ஆனால் அது தவறாகும் என்றார்.

## சகல கிராம சேவகர்... 03ஆம் பக்கத் தொடர்

இயலுமை கிட்டும். அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நடத்துவோருக்கு எதிராக,... 03ஆம் பக்கத் தொடர்

வகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் வேலைநிறுத்தப் போராட்டங்களை மேற்கொள்வோருக்கு எதிராக அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும் அவர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுத்து வருவது தொடர்பிலும் அமைச்சர் சரத் வீரசேக்கர அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.(ஸ)

## தென்னாபிரிக்க நாடுகளின்... 03ஆம் பக்கத் தொடர்

பேரவையில் தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடுகளின் கடமையாகும்.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு சேவை செய்யாவிட்டால் 'பொறுப்புக்கூறல்' என்ற வார்த்தைக்கு எந்த அர்த்தமும் இல்லையென்றும் உயர்ஸ்தானிகர் அடிப்படையற்ற மற்றும் இட்டுக்கட்டப்பட்ட கதைகளில் தங்கியிருக்காமல் பரந்த கண்ணோட்டத்தில் இந்தப் பிரச்சினையைப் பார்க்குமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.(ஸ)

## சட்டத்தை சபாநாயகர்... 03ஆம் பக்கத் தொடர்

புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் எனப் பெயர் மாற்றம் பெறுவது உள்ளிட்ட திருத்தங்களுக்கு உள்ளாகிறது.

இதற்கமைய 2022ஆம் ஆண்டு 01ஆம் இலக்க மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு (திருத்தச்) சட்டம் (14) முதல் நடைமுறைக்கு வருகிறது.

## சைக்கிள் பயணங்களை...

அது வரவேற்கத்தக்க வேலைத் திட்டமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானத்தை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் அவர் குறிப்பிட்டார்.

## 12 வயது சிறுமி மீது ...

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியால் சிறுமி சுடப்பட்டுள்ளதாக தெரிவித்த கொஸ்லந்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## செஹான் மாலக...

செய்யப்பட்டார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அவர் தெரிவித்திருந்த கருத்து காரணமாக சட்டமாஅதிபரின் ஆலோசனைக்கமைய அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தார்.

## பெருந்தோட்ட குடும்பங்களுக்கு மாதாந்த...

வர்த்தக அமைச்சரின் தலைமையிலான குழு கவனத்தில் கொண்டு பரிந்துரைகளைச் சமர்ப்பித்துள்ளது. அப்பரிந்துரைகளின் பிரகாரம் அடையாளம் காணப்பட்டுள்ள 115,867 பயனாளி குடும்பங்களுக்கு மாதாந்தம் 15 கிலோ கோதுமை மா சலுகை விலையில் வழங்குவதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மைத்திரியின் மனு மீதான விசாரணை...

மற்றும் சமன் வீரமன் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் மேற்படி மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் சம்பவங்களில் மரணமடைந்தவர்களின் உறவினர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் தமக்கு நட்டஈடு பெற்றுத்தருமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கை செல்லுபடியற்றதாக்குமாறும் சகல குற்றங்களிலிருந்தும் தம்மை விடுவிக்குமாறும் கோரி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.(ஸ)

## சமுதித்த வீடு மீதான தாக்குதல்;...

விசாரணைகளை முன்னெடுத்து வரும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரமவின் இல்லத்திற்கருகில் உள்ளவர் உட்பட 32 பேரிடம் இவ்வாறு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் (14) கெஸ்பேவ நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்ததோடு தொலைபேசி தரவுகளை பெற்றுக் கொள்வதற்கான அனுமதியையும் பெற்றனர்.

இதற்கமைய நேற்றும் இது தொடர்பான விசாரணைகள் நடைபெறுவதோடு, விசேட பாதுகாப்பு கமராக்களில் பதிவாகியுள்ள காணொளி காட்சிகள் பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றன.

இந்த விடயம் தொடர்பில் கல்கிஸ்ச பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கண்காணிப்பின் கீழ் மூன்று பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளன.

## போராட்டத்தை தற்காலிகமாக...

தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க வேலைநிறுத்தப் போராட்டம் இன்று 16ஆம் திகதி காலை 8 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடை நிறுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

சுகாதாரத்துறை தொழிற்சங்கங்களின் நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டம் கடந்த ஒன்பது நாட்களாக நீடித்ததுடன் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிற்சங்க பிரதிநிதிகளுக்குமிடையில் விசேட பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றது.

அதனையடுத்து நேற்றையதினம் கூடும் தொழிற்சங்க சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் வேலைநிறுத்தப் போராட்டத்தை கைவிடுவதா இல்லையா என்பது தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என ரவி குமுதேஸ் தெரிவித்திருந்தார். அதற்கிணங்க நேற்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கிணங்க இன்று காலை முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிடப்போவதாக அவர் நேற்று தெரிவித்தார். எவ்வாறெனினும் கடந்த ஒன்பது தினங்களாக சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டத்தினால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## இலஞ்ச ஊழல் வழக்கிலிருந்து...

முன்னாள் தலைவர் விமலசேன ரூபசிங்க மற்றும் கூட்டுத்தானத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சந்ரபால லியனகே ஆகிய மூவரையுமே இவ்வாறு விடுவித்து கொழும்பு பிரதான நீதவான் புத்திக சி. ராகல நேற்று (15) உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, குறித்த வழக்கானது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் 3 ஆணையாளர்களினதும் எழுத்துமூல அனுமதியின்றி தொடரப்பட்டுள்ளதாகவும், அதனால் மீள வழக்குத் தாக்கல் செய்யும் நிபந்தனையின் கீழ் வழக்கை வாபஸ்பெற அனுமதிக்குமாறும் இலஞ்ச ஊழல் விசரணை ஆணைக்குழுவினர் நீதிமன்றைக் கோரினர். இதனையடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

# பொலிசாரின் டிப்பர்களிலும் மண் கடத்தல் சம்பவங்கள்



## சிறீதரன் MP பகிரங்க குற்றச்சாட்டு

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு பொலிசார், இராணுவத்தினரின் துணையுடனேயே இடம்பெறுகிறது.

பொலிசாரின் டிப்பர் வாகனங்கள் கூட மணல் ஏற்றுவதாக மக்கள் தெரிவிக்கிறார்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் பல இடங்களில் மணல், கிரவல் சட்டவிரோதமாக அள்ளப்படுகிறது. பொலிசாரின் டிப்பர் வாகனங்களும் மணல் கடத்தலில் ஈடுபடுவதாக மக்கள் சொல்கிறார்கள். அந்த வாகன இலக்கங்களையும் சொல்கிறார்கள்.

பல இடங்களில் இராணுவ காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களை கடந்தே மணல் டிப்பர்கள் செல்கின்றன. எப்படி அவை செல்கின்றன.

மணல் அகழ்வு பற்றிய தகவல்களை பொலிசாருக்கு வழங்கினால், தகவல் தந்தவர்களின் விபரங்களையும் பொலிசார் கடத்தல்காரர்களிற்கு வழங்கி விடுகிறார்கள் என தெரிவித்தார்.

## தரமான போக்குவரத்து சேவையை... 03ஆம் பக்கத் தொடர்

தேவையை பூர்த்தி செய்வதற்கு வாய்ப்பாக அமையுமென ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

போக்குவரத்து கட்டமைப்பிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு நட்புறவுடன் செயற்படுமாறு அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ள ஜனாதிபதி, மக்களை அசௌகரியப்படுத்தும் தொழிற்சங்கப் போராட்டங்களை நிறுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

போக்குவரத்துத் துறையை முறையாகப் பராமரிப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும், தொழில்நுட்பம் மற்றும் விதிமுறைகளை மேம்படுத்துவதன் மூலம் பல சிரமங்களைத் தீர்க்க முடியும்.

சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு சுற்றுலாப் பகுதிகளை உள்ளடக்கி பயணிகள் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு இதன் போது பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போதுள்ள மேலதிக ஆளணிகள் பாரிய பிரச்சினையாக இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எந்தவொரு ஊழியரையும் நீக்காமல் முறையான பயிற்சி மற்றும் ஆட்குறைப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்காலத்தில் பயணிகள் போக்குவரத்துக்காக 100 மின்சார பஸ்களை இறக்குமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள், எதிர்கால எரிபொருள் நெருக்கடிகள் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தும் வகையில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து சேவை குறித்து மக்கள் முன்வைக்கும் குறைகள் தொடர்பில் அனைவரும் கவனம் செலுத்தி தரமான போக்குவரத்து சேவையை வழங்குவது அவசியமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

## கருத்துச் சுதந்திரத்திற்கு தடை...

தாக்கியவர்கள் யார்? இந்த மலப்பிரியர் யார் ? என்பதற்கான பதிலை நாம் இங்கு பேசவில்லை. பொலிஸார் துரிதமாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும். அதற்கு ஊடகங்கள் பங்களிக்க வேண்டும். ஜனநாயகத்தை விரும்பாத மலசல கூடத்தில் மறைந்திருக்கும் நபர்களே தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சமுத்திதவின் வீட்டுக்குச் சென்றேன். அவர்கள் அதிர்ச்சியில் உள்ளனர். அசுத்தமான சமூக குழுவின் அசுத்தமான செயலே இந்த தாக்குதல் மூலம் வெளிப்படுகிறது.

ஊடகவியலாளர் சமுத்திதவின் வீட்டின் மீதான தாக்குதலின் பாரதூரம் தொடர்பில் மாற்றுக்கருத்து கிடையாது. பொலிஸ் மாஅதிபர் விசேட குழுவொன்றை நியமித்துள்ளார். சீசிடிவி கெமராக்கள் தொடர்பில் ஆராய்வதற்கு மாத்திரம் 09 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. 60 பேர் இதில் உள்ளனர். விசாரணை நடைபெறுகையில் முன்கூட்டி முடிவுகளை எடுப்பது உகந்ததல்ல. சில குறியீடுகளை முன்வைத்து குற்றச்சாட்டு முன்வைக்க முடியும். ஆனால் அதன் மூலம் சமூகத்தில் வேறு கருத்துக்களை உருவாக்கலாம். பொறுப்பற்ற விடயங்களுக்கு நேரத்தை விரயமாக்காமல் தமது பொறுப்புகளை அமைச்சர்களும் ஊடகவியலாளர்களும் மேற்கொள்ள வேண்டும்.

இதனை விட அச்சுறுத்தல்கள், அழுத்தங்களுக்கு மத்தியில் மரணசான்றிதழை கையில் வைத்துக் கொண்டு பேனை பிடித்த ஊடகவியலாளர்கள் அன்றிருந்தார்கள். அவ்வாறான சூழலில் செயற்படாது கருத்துச் சுதந்திரத்தை உண்மையாக பிரயோகித்து ஊடகச் செயற்பாடு மேற்கொள்ள ஊடக அமைச்சராக வாய்ப்பளிப்பது எனது பொறுப்பாகும். பொறுப்பற்ற சிலர் சொல்லும் விடயங்களுக்கு சரியான தகவல்களை பெற்ற பின்னரே பதில் வழங்க முடியுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை ஊடக மாநாட்டில் எழுப்பும் கேள்விகளுக்காக ஊடகவியலாளர்கள் சி.ஐ.டியினால் விசாரிக்கப்பட முடியுமா? அதற்கு ஊடக அமைச்சர் தலையீடு செய்வாறா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

எந்த வகையிலும் பொலிஸில் விசாரிக்கப்பட மாட்டார்கள்.அவ்வாறான நிலை வந்தால் நானும் பொலிஸுக்கு வருவேன். உலகம் முழுவதும் ஊடகங்களுக்கு வரையறையற்ற அதிகாரம் கிடைத்துள்ளது.அரசியல்வாதிக்குள்ள அதிகாரத்தை ஊடகங்கள் கைப்பற்றியுள்ளன. ஊடகவியலாளர்கள் இந்த அதிகாரத்தை வரையறையற்ற பொறுப்பாக கருதி செயற்பட வேண்டும் என்றார்.

எங்களுக்காக முன்நிற்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. எனக்கும் சில தொலைபேசி அழைப்புகள் வந்தன ஒரு ஊடகவியலாளர் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த அமைச்சர், மக்களுக்கு உண்மையை அல்லது தகவலை வெளிப்படுத்துவதற்காக எவராவது பிரச்சினைக்கு முகம்கொடுப்பதாக இருந்தால் அது பாரதூரமானது. நாட்டின் ஜனநாயகம் ஆரோக்கியமாக உள்ளதா? என்ற கேள்வியே இதனால் எழும். என்மீது வைத்துள்ள நம்பிக்கை தொடர்பில் நன்றி தெரிவிக்கிறேன் என்றார்.

மீண்டும் வெள்ளை வான் கலாச்சாரம் தலைதூக்கியுள்ளதாக சமூகத்தில் கருத்து பரவுவது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்?

பொலிஸார் மேற்கொள்ளும் விசாரணைகள் மூலம் குற்றவாளிகளை வெளிப்படுத்த தவறும் பட்சத்தில் அந்த பொறுப்பு அரசின் மீதே வரும். அந்த பொறுப்பிலிருந்து தப்ப அரசுக்கு முடியாது. அமைச்சரவையுடனும் பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சருடனும் பொலிஸ் மாஅதிபருடனும் இது பற்றி பேசினேன். எந்த விதத்தில் வந்தாலும் கருத்து வெளியிடும் சுதந்திரத்திற்கு அழுத்தமோ தடையோ போடும் முயற்சியுடன் அரசாங்கம் உடன்படாது. எந்த விதத்திலும் இவ்வாறான விடயங்களை அரசாங்கம் ஊக்குவிக்காது. நடந்ததை மறைக்காது என்றார்.

## ச.தொ.ச ஊடாக குடிநீர்...

35 ரூபா பெறுமதியான ச.தொ.ச குடிநீர் போத்தல்கள் 29 ரூபாவுக்கு மொத்த விலையில் வழங்க இருப்பதாகவும் இந்தத் திட்டத்தின் ஊடாக சூழல் மாசடைவை தடுக்க வாய்ப்பு ஏற்படுமெனவும் அவர் கூறினார். சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார்.

## அமரர் எஸ்.டி. சிவநாயகம் நினைவு...

ஞாபகார்த்த முத்திரை இன்று 16 ஆம் திகதி புதுச்செட்டிதெரு சாய் மத்திய நிலையத்தில் வெளியிட்டு வைக்கப்படுகின்றது. ஊடகத்துறை அமைச்சர் டக்ளஸ் அழகப்பெருமவின் பணிப்புரையின் பேரில் இலங்கை முத்திரைப் பணியகம் நினைவு முத்திரையை வெளியிடுகின்றது. மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வெ. இராதாகிருஷ்ணனின் வழிகாட்டலில் மூத்த பத்திரிகையாளர் எச்.எச்.விக்கிரமசிங்க அண்மையில் ஊடகத் துறை அமைச்சர் டலஸ் அழகப்பெருமவை சந்தித்து அமரர் எஸ்.டி.சிவநாயகத்தின் நினைவு முத்திரையை வெளியிடுமாறு கோரியிருந்தார்.

## குறைந்த வருமானம் கொண்ட...

பயனாளி குடும்பங்களுக்கு டிஜிட்டல் அட்டையை வழங்குவதற்கு தீர்மானித்திருப்பதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட விரிவான பொருளாதார அபிவிருத்தி தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் ஒரு வேலைத்திட்டமாக வீடுகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரப் பாதுகாப்பு (நிவாரணப் பொதி) வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள அழுத்தங்களைக் குறைப்பதற்காக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் குறைந்த வருமானம் கொண்ட 40 குடும்பங்களை விசேடமான அளவுகோல்களைப் பயன்படுத்தி இப் பிரதேச செயலாளரின் பரிந்துரைக்கமைய தெரிவு செய்ய இருக்கிறோம்.

இக்குடும்பங்களுக்கு 2,000 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் பயனாளி குடும்பங்களுக்கு டிஜிட்டல் அட்டையை வழங்குவதுடன், அட்டையைப் பயன்படுத்தி வீடுகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்தி தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்களை கொண்ட சிறியளவிலான பல்பொருள் விற்பனை நிலையங்கள் மூலமாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

அதற்கமைய, இவ் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## EPF,ETF என்பன மிகைக்கட்டண...

அவற்றின் பெயர்கள் நீக்கப்படுமெனவும் அவர் அறிவித்ததாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கடந்த ஆட்சியிலே ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி என்பன கம்பனிகளாக உட்சேர்க்கப்பட்டதாலே இந்தப் பிரச்சினை எழுந்தாகவும் அதனை செய்தவர்களே இன்று அரசாங்கம் அவற்றில் கை வைப்பதாக விமர்சிப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் இது தொடர்பாக வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், 02 பில்லியனுக்கும் அதிகமான வரி அறவிடப்படக்கூடிய வருமானம் பெறும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களிடம் ஒரே தடவையில் 25 வீத மிகைக் கட்டண வரியை விதிக்க வரவு செலவுத் திட்டத்தில் பிரேரிக்கப்பட்டது. அவ்வாறான 69 நபர்கள் மற்றும் நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த நிலையில் EPF, ETF நிதியங்களையும் இதில் உள்ளடக்கி வரி அறிவிப்பட இருப்பதாக பொய்ப்பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது.

இது தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குழு நிலையில் இது தொடர்பான திருத்தம் முன்வைக்கப்பட்டு இந் நிறுவனங்கள் அகற்றப்படுமென நிதி அமைச்சர் அமைச்சரவையில் உறுதிபட அறிவித்தார்.

கடந்த நல்லாட்சியில் சர்வதேச நாணய நிதியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி EPF, ETF என்பவற்றை கம்பனிகளாக உட்சேர்த்தன. இதனால் தான் இந்த குழப்ப நிலை உருவானது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் வழங்கப்பட்ட சகல நிவாரணங்களையும் நல்லாட்சி நிறுத்தியது. வரிநிவாரணங்களை இரத்துச் செய்ததென்றும் அவர் குறிப்பிட்டார்..

## தெளிவத்தைக்கு இன்று...

பல நூல்களையும் வெளியிட்டு வைத்துள்ளார். மலைநாட்டு எழுத்தாளர் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதுடன் மலைநாட்டு விடயங்கள் சம்பந்தமாக பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரது பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று கொழும்பில் அவரது இலக்கிய நண்பர்கள் பலரும் இணைந்து அவரை வாழ்த்தி பாராட்டு விழாவை நடத்துகிறார்கள்.

## நாட்டில் எதிர்வரும் 03 மாதங்களுக்கு...

மேலும் குறிப்பிடுகையில்,

தற்போது தேவையான அளவு மின் உற்பத்தி இடம்பெறுவதாக மின்சார சபை அறிவித்துள்ளது. அதற்கமைய தொடர்ந்து மின் வெட்டு இடம்பெறாது.

ஒருவேளை மின் உற்பத்தி நிலையங்கள் செயலிழக்கும் பட்சத்தில் மின்வெட்டு இடம்பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

100 மெகாவோட் மின்னுற்பத்தி நிலையம் செயலிழக்குமாக இருந்தால் மின்வெட்டு இடம்பெறாது. அதற்கு மேற்பட்ட மெகாவோட் மின் உற்பத்தி செய்யும் மின் உற்பத்தி நிலையங்கள் செயலிழந்தால் ஒரு மணிநேரம் அல்லது ஒன்றரை மணிநேர மின்துண்டிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## அத்தியாவசியப் பொருட்களை...

இருப்பதோடு ஏனைய அங்கத்தவர்களாக வர்த்தக அமைச்சர், விவசாய அமைச்சர், துறைமுகங்கள்,கப்பல்துறை அமைச்சர், கூட்டுறவு சேவைகள், விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், அலங்கார மீன்கள் வளர்ப்பு, நன்னீர் மீன்பிடி மற்றும் இறால் வளர்ப்பு, மீன்பிடித் துறைமுகங்கள், ஆழ்கடல் வள்ளங்கள் நடவடிக்கைகள் மற்றும் கடலுணவு ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர், கால்நடை வளங்கள், பண்ணைகள் ஊக்குவிப்பு மற்றும் பால் மற்றும் முட்டை சார்ந்த தொழிற்றுறை இராஜாங்க அமைச்சர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் ஏற்றுமதி முன்னுரிமை தொழிற்றுறைக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் தொழில் உபகரணங்கள் இறக்குமதி செய்யவும் அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது.

அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் ஏற்றுமதி முன்னுரிமை தொழிற்றுறைக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் தொழில் உபகரணங்கள் இறக்குமதி செய்வதற்காக மாற்று வழிமுறையைக் கண்டறிவதற்கான தேவை அமைச்சரவையால் கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைய, அவ்வாறான உபகரணங்கள் நாட்டிற்கு இறக்கமதி செய்யும் நாடுகளுடன் கலந்துரையாடுவதற்காக அமைச்சரவை உபகுழுக்களை நியமிப்பதற்கும் அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

சீனக் குடியரசுடன் கலந்துரையாடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் தலைமையில் வர்த்தக அமைச்சர், கைத்தொழில் அமைச்சர்,பெருந்தோட்டத்துறை அமைச்சர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதோடு ஜப்பான் நாட்டுடன் கலந்துரையாடுவதற்காக வெளிவிவகார அமைச்சர், சுகாதார அமைச்சர்,வெகுசன ஊடக அமைச்சர், மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு அரசுகளுடன் கலந்துரையாடுவதற்காக வெளிவிவகார அமைச்சர்,இளைஞர் விவகாரங்கள், விளையாட்டு மற்றும் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சம்மாந்துறைக்கு விஜயம்...

சமூக நலத்திட்டத்தின் ஊடாக, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு சுமார் 3 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் எம்.ஏ ஹசனலியின் அழைப்பின் பேரில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு நேற்று (15) விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, குறித்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அஸாத் எம். ஹனிபா தலைமையிலான அபிவிருத்திகுழுவினரிடன் குறித்த மருத்துவ உபகரணங்களை கையளித்தார்.

கொரோனா தொற்றினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குழு மற்றும் அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் இணைந்து மேற்குறித்த திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிகழ்வின் போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரதாச கலப்பதி, ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் எம்.ஏ.ஹசன் அலி, கல்முனை தொகுதி பிரதம அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ்.ஏ. ரஸாக், அமைப்பாளர் கயான் தர்ஷன மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தி முக்கியஸ்தர்கள், வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நல்லாட்சி காலத்தில் அலரி மாளிகையில் இருந்தே தீர்ப்புகள் எழுதப்பட்டன

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன



லோரன்ஸ் செல்வநாயகம்

நல்லாட்சி அரசாங்க காலத்தில் நீதிமன்றங்களில் அன்றி அலரி மாளிகையில் இருந்தே தீர்ப்புகள் எழுதப்பட்டன என அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அரசியல்வாதிகளையும் நீதித்துறையினரையும் அலரிமாளிகைக்கு அழைத்து எந்த வழக்கில் எவ்வாறு தீர்ப்பு வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்ட காலம் அது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நீதித்துறை சுயாதீனம் பற்றி பேசுபவர்கள் அவர்களின் காலத்தில் அது இருந்ததா என பார்க்க வேண்டும் தமக்கு வேண்டிய வர்களையன்றி குற்றம் செய்தவர்களையே தண்டிக்க வேண்டும். அந்த ஆட்சியில் அவ்வாறு நடக்கவில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்:

நடைமுறை சட்டங்கள் மாற்றப்பட வேண்டும். இதனை எதிர்க்கட்சியும் ஏற்றுக்கொள்ளும் என்று நினைக்கின்றேன்.

கடந்த சில தினங்களாக சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. அதனால் நோயாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். அவர்கள் கண்ணீருடன் காணப்படும் காட்சிகளை தொலைக்காட்சி ஊடாக காண முடிகிறது. 25 வருட காலம் கவனிக்கப்படாமல் இருந்த ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் தமக்கும் சம்பள முரண்பாடு உள்ளதாக கூறி சுகாதாரத்துறையினர் வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்கின்றனர். இதனால் பாதிப்படைவது யார்? சாதாரண அப்பாவி மக்களே என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

அதில் அரசியல் உள் நோக்கங்களும் உள்ளன. கடந்த அரசாங்கத்தில் பிரதமருக்கு மிக நெருக்கமாக செயற்பட்டவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர். அந்த அரசாங்கத்தின் காலத்தில் ஏன் அவர்கள் அவர்களுக்கான சம்பள முரண்பாட்டை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கவில்லை என நாம் கேட்க விரும்புகின்றோம்.

சிகிச்சைகள் இன்றி மருந்துகளின்றி நோயாளிகள் பாதிக்கப்படுகின்றனர். மரணங்களும் நேரிடலாம் சுகாதாரத் துறை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் தொடர்பான சட்டங்களில் மாற்றம் ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# முகத்தமுஷ் ஷாதுலி ஸாபிர் ஹாஜியார் காலமானார்

(பேருவளை விசேட நிருபர்)



சீனன் கோட்டை, வடு கொடையைச் சேர்ந்த முகத்தமுஷ்ஷாதுலி மர்ஹூம் ஏ.எச்.எம். ஷஹீத் தம்பதிகளின் புதல்வர் முகத்தமுஷ் ஷாதுலி எம்.எஸ்.எம். சாபிர் கடந்த (12) சனிக்கிழமை சீனன்கோட்டையில் காலமானார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஊடக ஆய்வு அதிகாரியாக கடமையாற்றும் இஸ்பஹான் ஸாபிரின் தந்தையான இவர், சீனன் கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை, நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் உறுப்பினராகவும், ஜாமியதுல் பாஸிய்யதுஷ் சாதுலியா கலாசாலையின் ஆரம்ப செயலாளராகவும், ஷாதுலியா கவுன்சிலின் செயலாளராகவும், சீனன் கோட்டை ஷுப்பானுஷ் ஷாதுலியின் இயக்கத்தின் உறுப்பினராகவும், எகொடவத்தை தாருள் உலூம் ஸாவியாவின் நிர்வாக குழு உறுப்பினராகவும் சேவையாற்றியுள்ளார்.

சீனன்கோட்டையில் முன்பு வெளிவந்த அல் மிஸ்பா சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும், சீனன்கோட்டை வை.எம்.எம்.ஏ மற்றும் முஸ்லிம் லீக் ஆரம்பகால உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவரின் ஜனாஸா நல்லடக்கம் சனிக்கிழமை இரவு சீனன்கோட்டை பாஸிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், பேருவளை நகர சபை தலைவர் மஸாஹிம் மொஹமட், முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல் உட்பட பெருந்திரளானவர்கள் அன்னாரின் ஜனாஸாவில் கலந்து கொண்டனர்.

# உக்ரேன் விவகாரம் சீனா தாய்வான் மீது படையெடுப்பதை ஊக்குவிக்கும் வொஷிங்டன் செய்திச் சேவை தெரிவிப்பு



ரஷ்யா உக்ரேன் விவகாரத்தை சினா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் ரஷ்யா படையெடுக்குமானால் தாய்வான் மீது படையெடுத்து தாய்வானை சீனாவுடன் இணைத்துக் கொள்வதை அது நியாயப்படுத்தும் என அந்நாடு கருதுவதாகவும் வொஷிங்டனை தளமாகக்கொண்ட குளோபல் ஸ்டார் வியூ செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

ரஷ்யா உக்ரேன் மீது படையெடுக்கும் பட்சத்தில் மேற்கத்திய நாடுகள் அதை எவ்வாறு எடுத்துக்கொண்டு செயற்படும் என்பதை சீனா அவதானித்து அதன்படி தன் தாய்வான் மீதான படையெடுப்பை தீர்மானிக்கும் என்று குளோபல் ஸ்டார் மேலும் கூறியுள்ளது. ஏனெனில் சீனாவின் பிரிக்க முடியாத பகுதியாகவே தாய்வானை சீனா கருதுவதோடு ஒரே சீனா என்ற கொள்கையில் எந்தவொரு மாற்றத்தைச் செய்யவும் அது தயாராக இல்லை.

எனினும் சீனா தாய்வான் மீது படையெடுப்பதை ரஷ்யா உக்ரேன் மீதான படையெடுப்போடு ஒப்பிடுவது தவறு என்றும் அது ஒரு பிராந்திய நிகழ்வாக முடிவடையாது. பலம் பொருந்திய மேற்கத்திய நாடுகள் இராணுவ ரீதியாக தலையிடும் ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் குளோபல் ஸ்டார் வியூ மேலும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் தாய்வானோடு இராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள விரும்பும் நாடுகளை எச்சரிக்கும் வகையில் சீனா அந்நாடுகளுடன் கடுமையாக நடந்துகொள்கிறது. தாய்வானின் ஸ்லோவேகியா ஒரு பிரதிநிதிகளுக்கான அலுவலகத்தை திறக்க முடிவு செய்தபோது ஸ்லோவினியா பிரதமருக்கு எச்சரிக்கை விடுக்கும் தொனியில் 'அது ஆபத்தானது' என சீனா தெரிவித்திருந்தது. லித்துவேனியாவில் தாய்வான் ஒரு தூதரகத்தை திறந்தபோது லித்துவேனியா மீது சீனா பொருளாதாரத் தடைகளை விதித்தது.

# 5000ரூபா இலஞ்சம் பெற்ற சுகாதார பரிசோகர் கைது

பேராதெனிய சிரிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலையில், பொது சுகாதார பரிசோதகரொருவர் அந்த வைத்தியசாலையிலுள்ள உணவக உரிமையாளரிடம் ஐயாயிரம் இலஞ்சம் பெற்றபோது கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்சம் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பிலிமத்தலாவை பிரதேசத்தைச் சேரந்த குறித்த பொது சுகாதார பரிசோதகர் பேரதெனிய போதனா வைத்தியசாலையின் உணவகத்தை நடத்தி வரும் உரிமையாளரிடம் இவ்வாறு இடைக்கிடை இலஞ்சம் பெற்றுக்கொள்ளப்படும் என்று குறித்த நபரினால் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கமைய இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



பிரபல திரைப்படக் கலைஞரும் அரசியல்வாதியுமான மறைந்த விஜய குமாரதுங்கவின் பாணந்துறை நகரில் காலி வீதியிலுள்ள அன்னாரின் உருவச்சிலை அமைந்துள்ள பகுதி சுயாதீன ஊடகவியலாளர் சமன் காரியவசம் தலைமையில் புனரமைப்புச் செய்து மெருகூட்டப்பட்டுள்ளது. மேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே புனரமைப்பு வேலைத் திட்டத்தைப் பார்வையிடுவதையும் இதற்காக தனது அன்பளிப்பை கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# மாத்தறை மின்னத்துல் பாஸிய்யாவில் இன்று முப்பெரும் விழா

வெலிகம தினகரன் நிருபர்

மாத்தறை மின்னத்துல் பாஸிய்யா அரபுக் கல்லூரியின் 7ஆவது அல்ஆலிம், அல்ஹாபிழ் மற்றும் அல் ஆலிமா பட்டமளிப்பு விழா இன்று புதன்கிழமை (16) காலை 8.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் அதிபர் ஷைகுல் மின்னா கலீபதுஷ்ஷாதுலி மௌலவி அல்உஸ்தாத் எம்.எஸ்.எம். இஸ்திகார் (பாரி) தலைமையில் இடம்பெறவுள்ள முப்பெரும் விழாவில் அகில இலங்கை ரிபாஇய்யா தரீக்கா சங்க ஆன்மிக தலைவர் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் முகம்மத் ஆசிக் தங்கள், அஷ்ஷேய்க் அஸ்ஸெய்யித் முகம்மத் அஸ்லம் ஜிப்ரி மௌலானா (கேரள இந்தியா) மற்றும் தரீக்கதுல் அறூஸிய்யத்துல் காதிரிய்யா ஆன்மிகத்தலைவர் அஷ்ஷெய்க அல்லாமா தைக்கா அஹ்மது நாஸிர் ஆலிம் (ஜலாலி) ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

விஷேட பேச்சாளராக கொழும்பு உம்முஸாவியா அஜ்வதுல் பாஸிய்யா அறபுக்கல்லூரியின் அதிபர் அல்உஸ்தாத் மௌலவி அஹ்மது ஸூபி (மஹ்ழரி) மற்றும் கௌரவ அதிதிகள் மற்றும் விசேட அதிதிகளாக அறபுக் கல்லூரிகளின் அதிபர்கள், முக்கியஸ்தகர்கள் என பலரும் கலந்து கொள்கின்றனர். இவ்விழாவில் 2016 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் கல்வி கற்ற 36 மாணவர்கள் அல் ஆலிம் சான்றிதழ் பட்டம் பெற்றும் 7 மாணவர்கள் அல்ஹாபிழ் சான்றிதழ் பெற்றும் மூன்று மாணவிகள் அல்ஆலிமா பட்டம் பெற்றும் வெளியேறவுள்ளனர். இந்நிகழ்வில் மின்னத்துல் பாஸிய்யா அரபுக்கல்லூரியின் நிர்வாக சபைத்தலைவரும் மாத்தறை மீறா ஜும்ஆப்பள்ளிவாசல் ட்ரஸ்டியுமான அல்ஹாஜ் மதனி லாபிரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# ஸ்ரீ வித்யா குருகுல அதிபரின் மறைவிற்கு இந்துமத விவகார இணைப்பாளர் அனுதாபம்



கொழும்பு முகத்துவாரம் அந்தண சிறுவர்களின் வேத சிவாகம பாடசாலையான ஸ்ரீ வித்யா குருகுல அதிபரான சமஷ்கிரத பண்டிதர் இரா. பாலகிருஷ்ண ஐயரின் மறைவிற்கு பிரதமரின் இந்து மத விவகார இணைப்பாளர் சிவ ஸ்ரீ இராமசந்ர குருக்கள் பாபு சர்மா தனது அனுதாபங்களை தெரிவித்துள்ளார். இவர் கொழும்பு கிராண்ட்பாஸ் ஸ்ரீஞான பைரவர் தேவஸ்தான ஆதின கர்த்தாவும் சாகித்ய வியாகரணச்சார்ய பட்டம் பெற்றவர். அந்தண மாணவர்களுக்கு சமஸ்கிரத அறிவை எழிமையான முறையில் கற்பித்த குருவின் மறைவு அந்தண மக்களுக்கு பெரும் இழப்பாகும் என பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

# பண முகாமைத்துவ சந்தையில் முன்னிலை வங்கியாக DFCC

DFCC வங்கி தனது வாடிக்கையாளர்களை மையப்படுத்திய சேவை மற்றும் டிஜிட்டல் புத்தாக்கம் ஆகியவற்றில் கொண்டுள்ள அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், Euromoney ஆல் இலங்கையில் பண முகாமைத்துவத்தில் சந்தையில் முன்னிலை வகிக்கும் வங்கியாக 2021 ஆம் ஆண்டிற்கான வாக்களிப்பில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. DFCC வங்கி தனது DFCC iConnect என்ற அதன் புரட்சிகரமான இலத்திரனியல் வங்கிச்சேவைத் தளமேடை மூலமாக வழங்கும் புத்தாக்கமான பண முகாமைத்துவ முன்மொழிவுக்காக இந்த அங்கீகாரத்தைச் பெற்றுள்ளது.

1969 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட Euromoney சஞ்சிகை, உலகளாவிய நிதி உலகம் மற்றும் மூலதனச் சந்தைகளுக்கான முதன்மை சஞ்சிகையாகும். Euromoney முன்னெடுக்கும் பண முகாமைத்துவ கணக்கெடுப்பு உலகளவில் முன்னணி பண முகாமையாளர்கள், திறைசேரியாளர்கள் மற்றும் நிதி அதிகாரிகளிடமிருந்து கருத்து மூலமாக பதில்களைப் பெற்றுக்கொள்வதுடன், இது உலகளாவிய பண முகாமைத்துவத் துறைக்கான முக்கியக் கணக்கெடுப்பாகக் கருதப்படுகிறது, மேலும் சர்வதேச சந்தையில் பணப்புழக்கம் மற்றும் பண முகாமைத்துவ துறைக்கு மிகவும் விரிவான வழிகாட்டியாகவும் கருதப்படுகிறது.

# எதிர்வரும் 20 வருடங்களில் நாட்டின் தேசிய உற்பத்தியை 05 மடங்காக்குவது அவசியம்

## – முன்னாள் பிரதமர் ரணில் தெரிவிப்பு

நாட்டின் சொத்துக்களான இளைய பரம்பரையினர் தற்போது நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு செல்வதற்கு தீர்மானித்துள்ள நிலையில் அந்த தேசிய வளங்களைப் பாதுகாத்து முன்னேற்றுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி மாணவர்களுக்கும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் நடைபெற்றுள்ள சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள ஒரே தேசிய வளம் மனித வளமே என தெரிவித்துள்ள அவர், அதற்கான சிறந்த எதிர்காலத்தை பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் மனித வளங்கள் இரும்போ சீமெந்தோ அல்லது இயந்திரங்களோ அல்ல என குறிப்பிட்டுள்ள அவர், அந்த வளங்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். முன்னேற்றமடைந்த நாடாக இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்வரும் 20 வருடங்களுக்குள் நாட்டின் தேசிய உற்பத்தியை 5 மடங்காக அதிகரிக்க வேண்டியுள்ளது என குறிப்பிட்டுள்ள அவர், நாட்டின் பொருளாதாரத்தை நிலையானதாக தக்கவைத்துக் கொள்வதற்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

இன்னும் பத்து வருடங்களுக்குள் ஓய்வூதியத்தை வழங்க முடியாத நிலை தோன்றலாம் என தெரிவித்துள்ள அவர் நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடியே அதற்கு காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாடுகளில் இருந்து வீடு திரும்பும் உய்கர்கள் சீனாவில் கைது



சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தில் உய்கர் முஸ்லிம்கள் கைது செய்யப்படுவது தொடர்பாகவும் வெளிநாடுகளில் வாழ்ந்து நாடு திரும்பும் உய்கர்களும் கைதாவதாகவும் ஃபிரி ஆசியா வானொலி செய்தி வெளியிட்டுள்ளது. ஜப்பானில் உய்கர் மொழி ஆய்வில் ஈடுபட்டிருந்த அப்துஹெலிஸ் அப்துரிஹெம் என்பவர் 2021ம் ஆண்டு நாடு திரும்பியதும் அவர் கைது செய்யப்பட்டார் என்றும் இவ்வானொலி மேற்கோள் காட்டியுள்ளது.

இதே சமயம் துருக்கியில் வளர்க்கப்பட்ட இரண்டு சிறார்கள் குடும்பத்தாருடன் சீனா திரும்பிய போது அச்சிறார்கள் பலவந்தமாக பாடசாலைகளில் சேர்க்கப்பட்டு தங்குவிடுத்திகளில் வைக்கப்பட்டு தலை மழிக்கப்பட்டு அனாவசியமாக தாக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தேசிய பொது வானொலி தன் செய்தியில் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக உய்கர் மற்றும் துருக்கி மொழிகளை இவர்கள் மறந்து விட்டதாகவும் பின்னர் துருக்கிக்கு திரும்பியபோது போஷாக்கின்மையாலும் பயப்பிராந்தியாலும் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் இவ்வானொலி தெரிவித்துள்ளது.


2015 ஆம் ஆண்டு இலக்கம் 5 தேசிய ஔடத ஒழுங்கமைப்பு அதிகார சபை சிட்டத்தின் 131 ஆம் பிரிவின் படியும் கௌரவ நீதிமன்றத்தின் உத்தரவின்படி

பொது அறிவித்தல்

இல.276, நீர்கொழும்பு வீதி, வத்தளை எனும் முகவரியை சேர்ந்த கெமிலஸ் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் சகல இலங்கை மக்களுக்கும் அறிவிப்பது வழக்கிலக்கம் 20484/21க்கு அமைய மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தால் வைத்தியரின் பற்றுச்சீட்டின்றி ப்ரீகெப்லின் எனும் மருந்தை விற்பனை செய்த குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டு ரூபா 20,000 தண்டப்பணம் செலுத்தினேன்.

எனவே இவ்வாறு சட்டமுறையற்ற செயல் இனிமேல் செய்யமாட்டேனென்று இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோருகிறேன்.



திகதி 14.02.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4678
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,712,690.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 0 4 5 2 9 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 43,997,245.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2973
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,887,120.00
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 04 20 46 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,550,814.40

Mega POWER மெகா பவர் கோடி +23
சீட்டிழுப்பு இலக்கம் 1026
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,254,780.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 236,016,110.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து T சுப்பர் இலக்கம் 13 வெற்றி இலக்கங்கள் 12 13 43 62

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 708
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,860,340.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 24 35 42 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,360,176.00

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0019
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,093,578.24
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 31 38 40 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

வாசனா சம்பத Vasana Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் :1695
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,293,800.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 09 20 50 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,553,270.70

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பொருளியல்துறை பேராசிரியர் சின்னத்துரை விஜயகுமார் அவரது சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டி மத்தொனி மக்களால் கடந்த ஞாயிறன்று பாராட்டிக் கௌளரவிக்கப்பட்டார். பேராசிரியர் மங்கல வாத்தியங்கள் சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும், விழாவுக்குத் தலைமை தாங்கிய ஓய்வு பெற்ற அதிபர் இளையதம்பி இராகவன், பேராசிரியர் சி.சிவலிங்கராசா, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை உபதவிசாளர் க.பொன்னையா ஆகியோர் உரையாற்றுவதையும், பேராசிரியருக்கு விருது வழங்கப்படுவதையும் காணலாம்.

## மேற்படிப்பிற்காக செல்லவுள்ள வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர்

ஓமந்தை விஷேட நிருபர்



வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலா நிதி க.ராகுலன் மருத்துவ நிர்வாக மேற்படிப்பிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் நாளை மத்திய சுகாதார அமைச்சில் நடைபெறவுள்ள முதல் நாள் பயிற்சியை மேற்கொள்வதற்காக செல்லவுள்ளார்.

நேற்று வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்ட அவர் தனது கடமைகளை பதில் பணிப்பாளராக கடமையாற்றிய வைத்திய கலாநிதி மதுரகனிடம் கையளித்து மத்திய சுகாதார அமைச்சிற்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா தொற்று காலத்தில் வவுனியா வைத்தியசாலைக்கு அதிகளவான நோயாளர்கள் அனுமதிக்கப்பட்ட போது அவர்களுக்கான சேவையை வழங்குவதற்கு வைத்தியசாலையை சீரமைத்ததுடன், வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட சுகாதார பணியாளர்களை ஒழுங்கமைத்து சிறப்பான சுகாதார சேவையை வழங்கியிருந்தார்.

இதேவேளை வைத்தியசாலையின் பௌதீக வளங்களோடு வைத்திய உபகரணங்களையும் மத்திய மாகாண சுகாதார அமைச்சுக்களில் இருந்து பெற்று சுகாதார வசதிகளை மேம்படுத்தியிருந்ததுடன் அண்மையில் பி.சி.ஆர் ஆய்வு கூடமும் மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் தொழிற்பாட்டு நிலைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் சேவை வழங்கலின் தரத்தினை குறுகிய காலத்தினுள் பல்வேறு பரிமாணங்களில் விருத்தி செய்திருந்தமையால் அவர் மேற்படிப்பிற்காக சுகாதார அமைச்சுக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வட மாகாண நன்னீர் மீனவர்களுக்கு பெறுமதியான குல்லாக்கள் வழங்கிவைப்பு

(புதுக்குடியிருப்பு விசேட, பரந்தன் குறூப் நிருபர்கள்)



வடமாகாண நன்னீர் மீனவர்களுக்கு 6.4 மில்லியன் ரூபாய் பெறுமதியான குல்லாக்கள் அமைச்சரால் வழங்கிவைக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை நிதியின் 6.4 மில்லியன் ரூபா செலவில் நன்னீர் மீனவர்களுக்கு குல்லா மற்றும் குல்லா கட்டைகள் வழங்கும் நிகழ்வு மாங்குளத்தில் அமைந்துள்ள வடமாகாண நீர்பாசன திணைக்கள அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கடற்தொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், பிரதி மாகாண நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் வீ.பிறேம்குமார் வடமாகாண மீன்பிடி பணிப்பாளர் பர். அபிராமி மற்றும் அமைச்சின் செயலாளர்கள், அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த நன்னீர் மீன்பிடி சங்கங்களை சேர்ந்த 19 மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு 49 குல்லாக்களும்,58 குல்லாக்கட்டைகளும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

## குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு வழங்க கோரி வீதி மறியல் போராட்டம்

பருத்தித்துறை விசேட, யாழ் நிருபர்கள்



யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, கல்லூண்டாய் வெளி குடியிருப்பு மக்கள் நேற்று காலை வீதி மறியல் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

நீண்ட நாட்களாக தீர்வு வழங்கப்படாத தமது குடிநீர் பிரச்சினைக்கு உடன் தீர்வு வழங்க வேண்டும் என குறிப்பிட்டு யாழ்ப்பாணம் பொன்னாலை பருத்தித்துறை வீதியின் கல்லூண்டாய் பகுதி வீதியினை மறித்து வீதியின் குறுக்கே பொதுமக்களும் மாணவர்களும் அமர்ந்திருந்து கோஷங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனால் வீதியின் போக்குவரத்து ஒரு சில மணித்தியாலங்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் போராட்ட இடத்திற்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் வீதியை வழிமறித்து போராட்டத்தை முன்னெடுத்த மக்களை அகற்றி போக்குவரத்தினை முன்னெடுத்திருந்தனர்.

தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்த மக்களுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து தருவதாக வாக்குறுதி வழங்கியதை அடுத்து அதிகாரிகள் போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகைதந்திருந்தனர்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ( காணி ) எஸ்.முரளிதரன், யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் யசோதா உதயகுமார் உள்ளிட்டவர்கள் வருகைதந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் கலந்துரையாடியிருந்தனர். இக்கலந்துரையாடலில் பிரச்சினைக்கு உரிய தீர்வினை உடனடியாக பெற்று தருவதாக தெரிவித்ததோடு குடியிருப்பு பகுதிக்கும் நேரடியாக சென்று பார்வையிட்டதனை அடுத்து போராட்டம் நிறைவு பெற்றது.

அத்தோடு கல்லூண்டாய் வெளி குடியிருப்பு மக்களின் குடிநீர் தேவைக்கு உடனடியாக தீர்வினை வழங்குவதற்காக யாழ் மாவட்ட இராணுவத்தின் 512ஆவது படைப் பிரிவால் குடிநீர் விநியோகம் ஒவ்வொரு வீடுகளுக்கும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உத்தரப்பொங்கல் விழா முன் ஆயத்தக் கூட்டம்

(பரந்தன்குறூப் நிருபர்)



கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப்பொங்கல் விழா தொடர்பான முன் ஆயத்தக் கூட்டம் நேற்று (15.02.2022) மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) தலைமையில் ஆலய முன்றலில் நடைபெற்றது.

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப்பொங்கல் விழா எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம்திகதி நடைபெறவுள்ளது.

இப்பொங்கல் உற்சவத்தின் முன் ஆயத்தக்கூட்டம் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருலிங்கநாதன் (காணி) தலைமையில் நேற்று (15.02.2022) பகல் நாகதம்பிரான் ஆலய முன்றலில் நடைபெற்றது. இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கண்டாவளை பிரதேச செயலாளர் ரீ. பிருந்தாகரன், கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி (பதில் ) பிரியநந்தினி கமலசிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சுகாதார முறைகளைப் பின்பற்றி இம்முறை பொங்கல் உற்சவத்தினை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆலய சூழலை துப்புரவு செய்தல் வீதிகளை செப்பனிடுதல், குடிநீர் விநியோகம், போக்குவரத்துச் சேவை, பாதுகாப்புச்சேவை, மின்சார வசதி கழிவகற்றல் வர்த்தக நிலையங்களை ஏலமிடுதல், வைத்திய முதலுதவி சேவைகள், தாகசாந்தி நிலையங்கள் அமைத்தல், உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதில் ஆலயத்தொண்டர்கள், ஆலய நிர்வாகத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.




பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கை கிளையினரால் ஆனக்கோட்டை சாவக்காட்டுப் பகுதியில் வாழும் வறிய குடும்பங்களுக்கு 1500 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டது. இதற்கான நிதியினை புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் பூமணியம்மா அறக்கட்டளையின் தலைமை காரியாலயம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படம்: வேலணை குறூப் நிருபர்)



யாழ்.அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்தின் புதிய திறன் வகுப்பறைத் திறப்பு விழா அண்மையில் கல்லூரி அதிபர் தி.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன்,சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலக கிராம நிர்வாக உத்தியோகத்தர் வை.சுரேஸ் போன்றோர் கலந்து சிறப்பித்தனர்.

# கிழக்கின் குரல்




# நீண்டகாலம் நாடு முடக்கப்பட்டதால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது

## மீள்வதற்கு அனைவரும் செயலாற்ற வேண்டும் சந்திரகாந்தன் எம்.பி

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

தற்போதுள்ள சூழ்நிலையில் எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்தால் மந்திரத்தால் மாங்காய் பறிக்கலாம் என்ற சூழ்நிலையை ஊடகங்கள் உருவாக்க முயற்சிப்பதாகவும், யார் ஆட்சிக்கு வந்தாலும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் மாற்றத்தினை கொண்டுவர முடியாது.

இன்று சர்வதேசம் எங்கும் பொருளாதார நெருக்கடி காணப்படுகின்றது. மிக நீண்டகால முடக்கம் நாட்டில் முன்னெடுக்கப்பட்டதன் காரணமாக இந்த நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒவ்வொருவரும் செயலாற்ற வேண்டும் என, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.



அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்திற்கமைவாக சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்படும் சமுர்த்தி கொடுப்பனவினை மேலும் அதிகரித்து வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைவாக இந் நிகழ்வினை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுகள் நாடு பூராவும் இடம்பெற்றுள்ளன.

இதன்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் திங்கட்கிழமை (14) இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நிகழ்வு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி திணைக்கள பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இந்த நிகழ்வில் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் அ.சுதாகரன், உதவி பிரதேச செயலாளர் திருமதி சுபா சதாகரன் உட்பட சமுர்த்தி திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வின்போது சமுர்த்தி பயனாளிக்கான வீடு ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டதுடன், வாழ்வாதார உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

நாடு இக்கட்டான சூழ்நிலையில் உள்ளபோதிலும் அரசாங்கம் கிராம மட்ட பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்காக பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதன் அடிப்படையிலேயே சமுர்த்தி பயனாளிகளுக்கு அமைச்சரவையின் அனுமதியுடன் அதிகரித்த நிதி வழங்கப்படுகின்றது.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை உள்ள அரசாங்கம் என்ற அடிப்படையில் இதனை மிகவும் கவனமாக முகாமை செய்து மீண்டெழுந்து வருகின்றது எனத் தெரிவித்தார்.

# அட்டாளைச்சேனை தைக்கா நகர் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. இன் நெறிப்படுத்தல் மூலம் அட்டாளைச்சேனை தைக்கா நகர் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. இன் சமூக சேவைப் பிரிவின் பணிப்பாளர் ஊடகவியலாளர் ஏ.எல். றமீஸ் தலைமையில் திங்கட்கிழமை (14) தைக்கா நகர் மறுமலர்ச்சி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை ஜூம்ஆப் பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.எம்.ஜுனைத்தீன், ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஆதம்பாவா ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ.செயலாளரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஏ.எல்.கியாஸ்டீன், சீட்ஸ் பௌண்டேசன் தலைவர் ஆசிரியர் எம்.ஜே.அன்வர் நௌசாட், உட்பட அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. இன் பதவி வழி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு அட்டாளைச்சேனை தைக்கா நகர் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 74 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த. மாணவர்களுக்கு வழிகாட்டல் வகுப்புக்கள்

(மூதூர் தினகரன் நிருபர்)

2022 இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மூதூர் பிரதேச மாணவர்களின் நலன் கருதி, பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு விடுமுறை காலங்களில் மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

கொரோனா அசாதாரண சூழ்நிலையால் கடந்த ஆண்டில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பின்னடைவை கண்டன. இந்நிலையில் மாணவர்களுக்குரிய மேலதிக மாதிரி வழிகாட்டல் பரீட்சைகள், பிரதான பாடங்களுக்கான மேலதிக வகுப்புக்கள் என கொரோனா சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை முழுமையாக பின்பற்றிய வகையில் நடாத்தி வருவதால், மாணவர்கள் இதனால் பெரிதும் நன்மையடையக் கூடியதாக உள்ளது.

# சமுர்த்தி மானிய உதவிகள் மூலம் வருமானத்தை அதிகரிக்க வேண்டும்

## அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர்

(ஒலுவில் விசேட நிருபர்)

கொவிட் தொற்று காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையிலும், மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முஸாபிர் தெரிவித்தார்.

சுபிட்சத்தின் வேலைத்திட்டத்திற்கமைய சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சமுர்த்தி மானிய கொடுப்பனவு வழங்கும் வைபவம், சின்னப்பாலமுனை கிராம அபிவிருத்தி சங்கக் கட்டடத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். இமாமுதீன் தலைமையில் திங்கட்கிழமை (14) நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார். உதவி பிரதேச செயலாளர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,



நாட்டின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதற்கு வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி பயனாளிகள் இங்கு வழங்கப்படும் மானிய உதவிகளை வீண்விரயம் செய்யாமல் அதனூடாக தங்களது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அரசாங்கத்தின் இலக்கினை அடைய முடியும். கொவிட்19 தொற்று காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ள நிலையிலும் மக்களுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய சேவைகளும் மற்றும் நலன்புரி சேவைகளும் அரசாங்கத்தினால் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதென்றார்.

# அரச உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழிப்பயிற்சி



மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பில் அரச உத்தியோகத்தர்களுக்கான சிங்கள மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொள்வதற்கான பயிற்சிப் பட்டறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்டுவரும் அரசகரும மொழித் தேர்ச்சிக்கான சிங்கள மொழியினை பயிற்றுவிக்கும் பயிற்சிப்பட்டறை மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் திங்கட்கிழமை (14) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரனின் ஏற்பாட்டில் இடம் பெறும் இப்பயிற்சி நெறியானது, மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள், நிருவாக அலுவலகங்கள், கல்வி திணைக்கள அலுவலகங்கள், விவசாயம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களங்களில் கடமைபுரியும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் 80 பேருக்கு சிங்கள மொழித் தேர்ச்சியினை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியினை பூர்த்தி செய்வதனூடாக அரச உத்தியோகத்தர்கள் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டிய தகைமையாகிய அரசகரும மொழி சிங்களத்தில் தேர்ச்சி பெற்றவராகக் கருதப்படுவர்.

# அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி தொகை வழங்கி வைப்பு



(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

சுபிட்சத்தின் நோக்கு வேலை திட்டத்திற்கமைவாக சமுர்த்தி பயனாளிகளுக்கு 2022 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்ட அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி மானியத் தொகை வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று கிழக்கு, மேற்கு சமுர்த்தி வங்கியில் திங்கட்கிழமை (14 ) அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் தலைமையில் நடைபெற்றது.

இன் நிகழ்வில் அக்கரைப்பற்று சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர், உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர், முகாமைத்துவ பணிப்பாளர், கருத்திட்ட முகாமையாளர், வங்கி முகாமையாளர், சி.பி.யோ தலைவர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகளும் கலந்து கொண்டனர். இதன் போது அதிகரிக்கப்பட்ட மானியத் தொகையை பயனாளிகளுக்கு பிரதேச செயலாளர் வழங்கி வைத்தார்.

# சமுர்த்தி குடும்பங்களுக்கு அதிகரித்த கொடுப்பனவு வழங்கி வைப்பு

(திருக்கோவில் தினகரன் நிருபர்)

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தம்பிலுவில், திருக்கோவில் மற்றும் விநாயகபுரம் சமுர்த்தி வங்கி கிளை பிரிவுகளைச் சேர்ந்த 5336 சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களுக்கு சுமார் 35 இலட்சம் ரூபா அரசின் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் தலைமையில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் கிராமங்கள் தோறும் திங்கட்கிழமை (14 ) வழங்கி வைக்கப்பட்டன. அரசாங்கத்தின் சுபிட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்திற்கு அமைவாக சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களுக்கு அதிகரிக்கப்பட்ட மானிய பணத்தொகை வழங்கும் வேலைத் திட்டம் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் திருக்கோவில் பிரதேசத்தில் தம்பிலுவில் திருக்கோவில் மற்றும் விநாயகபுரம் சமுர்த்தி வங்கிக் கிளைப் பரிவுகளில் உள்ள சுமார் 5336 சமுர்த்திக் குடும்பங்களுக்கு 35 இலட்சம் ரூபா பயனாளிகளின் சமுர்த்தி முத்திரைகளின் தொகைகளுக்கு ஏற்ப அதிகரிக்கப்பட்ட பணத் தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



வரலாற்று பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் பாதுகாப்பு சிசிரிவி (CCTV)கமரா பொருத்துவதற்கான உபகரணங்களை காரைதீவை சேர்ந்த மாவடி கந்தசுவாமிஆலய தர்மகர்த்தா க.ஆறுமுகம் குடும்பத்தினர் அன்பளிப்புச்செய்தனர். அவ் உபகரணங்களை ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் உள்ளிட்ட பரிபாலன சபையினரிடம் ஆறுமுகம் கையளிப்பதைக் காணலாம்.

படம் : காரைதீவு குறூப் நிருபர்

# கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தால் நூல் வெளியீடு

முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்



கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை மற்றும் ஆயிரம் வேரும் அரும் மருந்தும் என்ற நூல்களை வழங்கி வைக்கும் நிகழ்வு கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தில் திங்கட்கிழமை (14) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில், கொவிட் 19 தொற்றுக் காலத்தில் சுதேச மருத்துவத் திணைக்களம் பாரிய பங்களிப்புக்களை மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களுக்கும் செய்திருந்தது.

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள், தனிமைப் படுத்தப்பட்ட பிரதேசங்களில் வசித்த குடும்பங்கள் மற்றும் தொற்றினால் பாதிக்கப்படாதவர்கள் என சகல மக்களுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் சுவதாரணி மற்றும் இமியுன் வூஸ்ட்டர் பானங்களுடன் ஆயுர்வேத மருந்துகளையும் வழங்கி வந்த செயற்பாடுகள் பாராட்டத்தக்கது என சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்.

இதன்போது மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதரினால் கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை மற்றும் ஆயிரம் வேரும் அரும் மருந்தும் என்ற நூல்களை சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி முரளிதரனுக்கு வழங்கி வைத்தார்.

# தும்பங்கேணி வார சந்தையை திறக்குமாறு மக்கள் கோரிக்கை

மண்டூர் குறூப் நிருபர்

போரதீவுப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட தும்பங்கேணி வார சந்தை கவனிப்பாரற்று கால்நடைகளின் உறைவிடமாக மாறியுள்ளதென பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, தும்பங்கேணி சந்தை, புற்புதர்கள், பற்றைகள் சூழ்ந்து காடுகள் மண்டிய நிலையில் கால்நடைகள் மற்றும் விஷ ஜந்துக்களின் இருப்பிடமாகவும் டெங்கு நுளம்பு பெருகும் அபாய வலயமாகவும் மாறியுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று வருட காலமாக செயற்பாடற்று பராமரிப்பின்றிக் காணப்படும் சந்தையின் சுற்றுச்சூழல் இவ்வாறு இருந்தும், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்கள் அசமந்தப்போக்குடனே செயற்படுவதாக, பிரதேச வாழ் பொதுமக்கள் கவலையுடன் அங்கலாய்க்கின்றனர்.

குறித்த சந்தைக் கட்டிடத்தினை முறையாக துப்புரவு செய்து வியாபாரிகளினதும் பொதுமக்களதும் தேவையறிந்து இயங்க வைக்குமாறு, பிரதேச வாழ்மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.








மலையக இளைஞர் யுவதிகளால் மலையக தமிழ் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் 100 புகைப்படங்கள் உள்ளடங்கலான புகைப்படக் கண்காட்சி நேற்றுமுன்தினம் (14) திங்கட்கிழமை யாழ். றக்கா வீதியிலுள்ள ஓவியக்கூடம் கலைத்தூது கலாமுற்றம் மண்டபத்தில் இடம்பெற்றது. மலையகத்திலிருந்து வந்த 40 இளைஞர் யுவதிகளின் புகைப்படத் தொகுப்பை உள்ளடக்கி கண்காட்சி இடம் பெற்றது. மலையக மக்களின் 200 வருட பின்னிப் பிணைந்த கதைகளை படங்களாக இப்புகைப்படக் கண்காட்சி சித்தரித்துள்ளது. புகைப்பட கண்காட்சி நேற்று இடம்பெற்றது. இதன் தொடர்ச்சியாக கொழும்பிலும் இக்கண்காட்சி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

படம்: கோப்பாய் குறூப் நிருபர்

## கொரோனா தடுப்பூசி அட்டைகளை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை

**இரத்தினபுரி சுழற்சி, மஸ்கெலியா தினகரன் நிருபர்**

இரத்தினபுரி, பலாங்கொடை, குருவிட்ட பிரதேசங்கள் வழியாக சிவனொளிபாதமலைக்கு யாத்திரை செல்லும் யாத்திரிகர்கள் கொரோனா தடுப்பூசி அட்டை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலினி லொகுபோதாகம தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், சிவனொளிபாதமலை யாத்திரை மேற்கொள்வோர் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணுதல் உள்ளிட்ட முறையான சுகாதார விதிமுறைகளை பின்பற்ற வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், கொரோனா தடுப்பூசி அட்டைகளை உடன் வைத்திருக்க வேண்டியது கட்டாயமில்லை என தெரிவித்த மாலினி லொகுபோதாகம, தடுப்பூசி அட்டை உடன் இருப்பது பாதுகாப்பானது எனவும் தெரிவித்தார்.

சிவனொளிபாதமலை யாத்திரைக்காக உள்நாட்டில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பக்தர்கள் பெருமளவில் வருகை தருகின்றனர்.

புதிய வைரஸ் தொற்று நோய்கள் குறித்து தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. எனவே பொதுமக்கள் அனைவரும் சுகாதார பிரிவு வழங்கியுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாக சுகாதார வழிமுறைகளை முறையாக கடைபிடிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

## குண்டும் குழியுமாக சாமிமலை வீதி



**மஸ்கெலியா தினகரன் நிருபர்**

மஸ்கெலியா, சாமிமலை பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் குண்டும் குழியுமாக இருப்பதால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனால் பஸ் நடத்துனர்கள், சாரதிகள், பயணிகள், பாடசாலை மாணவர்கள், பாதசாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு முன்வைக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மஸ்கெலியா பிரதேச சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்வந்து பஸ்தரிப்பிடம் மற்றும் சாமிமலை நகரிலுள்ள வீதியையும் செப்பனிட்டு தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

### காடுகளுக்கு தீ வைப்பு:

## காட்டு விலங்குகள் குடியிருப்புகளை நோக்கி படையெடுப்பு

**ஹற்றன் விசேட நிருபர்**



நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலையினையடுத்து பல பகுதிகளிலும் காடுகளுக்கு கடந்த காலங்களில் விசமிகளால் தீ வைக்கப்பட்டன.

இதன் காரணமாக பெருமளவான காட்டு வளங்கள் அழிக்கப்பட்டன. அதுமட்டுமின்றி நீர்நிலைகள் அற்றுப்போய் காட்டில் வாழும் உயிரினங்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக காட்டில் உள்ள விலங்குகள், தண்ணீர் மற்றும் உணவுகளை தேடி மக்கள் வாழும் குடியிருப்புக்களை நோக்கி படையெடுத்துள்ளன.

ஹற்றனை அண்டிய காட்டுப் பகுதிக்கு தீ வைத்ததன் காரணமாக காட்டில் வாழும் குரங்குகள் தற்போது நகர் பகுதியினை அண்மித்த தும்புறுகிரிய, ஆரியகம, இந்துமாசபை உள்ளிட்ட பல பிரதேசங்களுக்கு கூட்டம் கூட்டமாக உணவு தேடி வர ஆரம்பித்துள்ளன. இதனால் வீட்டுத்தோட்டங்களில் உள்ள பழவகைகள், வாழை உள்ளிட்டவைகளை குரங்குகள் சேதமாக்க ஆரம்பித்துள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் குரங்குகள் மின் இணைப்பு வயர்கள் மற்றும் தொலைக்காட்சி இணைப்பு வயர்கள் உள்ளிட்டவைகளையும் சேதப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே பொறுப்புவாய்ந்தவர்கள் இது குறித்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## நாட்டை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் முன்னின்று செயற்படுகின்றது

**ரோஹன திசாநாயக்க எம்.பி**

**மாத்தளை சுழற்சி நிருபர்**

நிதியமைச்சினால் இவ்வருடம் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 85 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியின் மூலம் பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இரத்தோட்டை பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரோஹன திசாநாயக்க தெரிவித்தார்.

உக்குவளை பிரதேசத்தில் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது, கொவிட் 19 அச்சம் காரணமாக உலக பொருளாதாரம் பாரிய அளவில் சரிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

இவ்வேளையில் எமது நாட்டில் அபிவிருத்தி திட்டங்கள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமைத்துவத்தின் ஊடாக நாட்டில் அபிவிருத்தி திட்டங்கள் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டை கட்டியெழுப்புவதற்கும் மக்களுக்கு சிறந்த சேவையை பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்கம் முன்னின்று செயற்பட்டு வருகின்றது என அவர் தெரிவித்தார்.

## தோட்டத்தொழிலாளி ஒருவர் பணிநீக்கம்

### ஊடகங்களுக்கு செய்தி வெளியிட்டதாக குற்றச்சாட்டு

**பதுளைதினகரன் விசேட நிருபர்**

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அநீதியை, ஊடகங்களுக்கு வெளியிட்டதினால், தொழிலாளி ஒருவர் தோட்ட நிர்வாகத்தினால் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பசறைப்பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

பசறை, கோணக்கலை பெருந்தோட்ட மேற்பிரிவைச் சேர்ந்த எம். கெப்பிரியல் என்ற தொழிலாளியே இவ்வாறு தோட்ட நிர்வாகத்தினால் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கோதுமை மாவிற்கு ஆயிரத்து இருநூறு ரூபாய் தொழிலாளர்களின் சம்பளத்தில் கழிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் சம்பளப்பட்டியலிலும் இக்கழிவு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் குறிப்பிட்டிருக்கும் கோதுமைமா தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. பதுளை மாவட்டத்தில் மேலும் சில தோட்டங்களில் இதே நிலமை இருந்து வருவதாக தொழிலாளர்கள் புகார் செய்கின்றனர்.

## பெருந்தோட்ட மக்கள் இன்னும் மோசமான நிலையிலேயே வாழ்கின்றனர்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

இந்திய வம்சாவளி பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஆண்டான் அடிமைகளாக அதாவது கொத்தடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றனர். இந்திய வம்சாவளி மக்களை இந்நாட்டில் வாழும் ஒரு தேசிய இனமாக இன்னும் பிரகடனப்படுத்தவில்லை என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம் தெரிவித்துள்ளார்.

ஊடகச் சந்திப்பொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இதுதொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டை ஆட்சி செய்த அனைவருமே இந்திய வம்சாவளி பெருந்தோட்ட மக்களை ஒரு கூலியாகவும் கில்லு கீரையாகவே பயன்படுத்துகின்றனர். அவர்களை ஒரு மனிதராக மதிப்பதில்லை. அவர்களை கொத்தடிமைகளாகவே வைத்திருக்கின்றார்கள். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும் முன் தேர்தல் காலத்தில் வெற்றி பெற்ற பின் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவோம் என கூறி தொழிலாளகளின் வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வந்தனர். பின்னர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. பெருந்தோட்ட மக்கள் ஏற்கனவே இருந்ததை விட தற்பொழுது மோசமான நிலையில் வாழ்கின்றனர். அண்மையில் அரசாங்கம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 5000 ரூபா சம்பளத்தை அதிகரித்துள்ளது.



ஆனால் தொழிலாளர்களுக்கு கோதுமைமா வழங்கி இழிவுபடுத்துகின்றார்கள். தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமை மா மாத்திரமா உணவாக பயன்படுத்துகின்றார்கள். மாவை வழங்கி எமது சமூகத்தை எந்தளவிற்கு இழிவு படுத்த முடியுமோ அந்த அளவிற்கு இழிவு படுத்துகின்றார்கள்.

அத்தோடு தொழிலாளர்களுக்கு வழங்கும் கோதுமை மா பொதியில் தேர்தல் பிரசாரம் செய்வது போல 'தோட்ட தொழிலாளர்களுக்கான மானிய நலத் திட்டம் நிதி அமைச்சு தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு வர்த்தக அமைச்சு கூட்டுறவு சேவைகள் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு என பெயர்களை அச்சிட்டு மாவை விற்பனை செய்கின்றார்கள். இன்று பெருந்தோட்ட பகுதியில் தோட்ட நிர்வாகங்கள் நினைத்தப்படி செயற்படுகின்றார்கள் என அவர் தெரிவித்தார்.

## கித்துள் பாணியை பயன்படுத்தி பட்டர் உற்பத்தி

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

குருவிட்ட எரத்த பிரதேசத்தில் வசிக்கும் லஹிரு டில்ஷான் (30) என்ற இளைஞன் கித்துள் பாணியை பயன்படுத்தி பட்டர் உற்பத்தி செய்வதில் வெற்றி கண்டுள்ளார்.

இலங்கையில் முதன்முறையாக "கிதுல் படர்" உற்பத்தி செய்த நிகழ்வு இதுவென அறியப்படுகிறது.

தயாரிக்கப்பட்ட கித்துள் படர் உட்பட கித்துள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ஏனைய பொருட்கள் அனைத்தும் அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு அண்மையில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் மாகாண ஆளுனர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

படர் உற்பத்தி சம்பந்தமாக கருத்து தெரிவித்த டில்ஷான் குறிப்பிட்டதாவது" கித்துள் பாணி மற்றும் தேசிய பாலினை பயன்படுத்தி கித்துள்பட்டர் உற்பத்தி செய்கிறேன். கித்துள் பட்டர், கித்துள் பாணி, கித்துள் மா பாவித்து பல்வேறுபட்ட உற்பத்திகளை செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனது உற்பத்திகள் தற்பொழுது உள்ளூர் சந்தைகளிலும் வெளிநாடுகள் பலவற்றுக்கும் விற்பனைக்கு அனுப்பி உள்ளேன். மாதாந்தம் கித்துள் பாணி 650 போத்தல்கள் எனது உற்பத்திகளுக்கு பயன்படுத்துவதுடன் தேவையான அளவு கித்துள் பாணியை சேகரித்துக் கொள்வது பிரச்சினையாக உள்ளது எனத் தெரிவித்தார்.





மாத்தளைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வருகைதந்த கண்டி இந்திய உதவித் தூதுவர் டாக்டர் ஆதிசாவை மாத்தளை மாநகர சபை முதல்வரால் வரவேற்கப்படுவதையும் இந்திய உதவித் தூதுவர் மாநகரசபை வளவில் மரக்கன்று ஒன்றை நட்டு வைப்பதையும் படங்களில் காணலாம். படம்: மாத்தளை சுழற்சி நிருபர்

## டெமேரியா தோட்டக் காணி அபகரிப்பு

**லுணுகல நிருபர்**

பசறை டெமேரியா பி தோட்ட கமேவெல பிரிவின் பிரதான வீதிக்கு அருகிலுள்ள தோட்டத்துக்கு சொந்தமான காணியை வெளியாட்கள் ஆக்கிரமித்தமை தொடர்பாக தோட்டத்தொழிலாளர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இப்பிரதேசத்தில் தற்காலிக குடிசை அமைத்துள்ளமை தொடர்பாக டெமேரியா தோட்ட தொழிலாளர்கள் சம்பவ இடத்திற்கு சென்று தமது எதிர்ப்பை வெளியிட்டனர். இதன்போது காணி ஆக்கிரமிப்பாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டது. இதனையடுத்து இ.தொ.காவின் பசறை பிரதேச சபை உறுப்பினர் வேலு ரவி, அமைப்பாளர் எஸ். கோவிந்தராஜ் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்ததுடன் இச்சம்பவம் தொடர்பாக இ.தொ.கா வின் உப தலைவரும் பெருந்தோட்டத் துறை அபிவிருத்திக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமானின் கவனத்திற்குக் கொண்டு சென்றனர். இவ்விடயம் தொடர்பாக உடனடியாக பதுளை பிரதி பொலிஸ்மா அதிபருடன் தொலைபேசியூடாக உரையாடியதோடு காணி ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார். இச்சம்பவம் தொடர்பில் டெமேரியா தோட்ட முகாமையாளரால் ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சங்கவி பிலிம்ஸின் கலாவிபூஷண விருது வழங்கிய விழா BMICH இல்






















படங்கள்:
எம்.நஸார், ருக்மல் கமகே




# 'கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம்'

- இப்பாகமுவ பிரதேசத்தில் பாரிய அபிவிருத்திகள்
- மக்களின் நீண்டகால குறைபாடுகளுக்கு நிரந்தர தீர்வு
- ஸ்ரீல. சு. க. அமைப்பாளரும் இப்பாகமுவ பிரதேச சபை உறுப்பினருமான எம். எஸ். எம். பாஹிம் திட்டங்களை முழு மூச்சாக நின்று செயற்படுத்துகிறார்

குருநாகல் மாவட்டத்தில் இப்பாகமுவ பிரதேச செயலகத்தில் அரசின் கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் இப்பாகமுவ பிரதேச சபை உறுப்பினருமான எம். எஸ். எம். பாஹிம் தலைமையில் நான்கு கிராம சேவகர் பிரிவுகளில் பாரிய அபிவிருத்திப் பணிகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இப்பாகமுவ பிரதேச சபைக்குட்பட்ட பத்தலகொட வட்டாரத்தில் கும்பலங்க, நேம்பிலி கும்புர, மெடிகே தேத்திலியங்க, ஹேனகெதர ஆகிய நான்கு கிராமிய உத்தியோகத்தர் பிரிவுகளிலும் பாரிய அபிவிருத்திப் பணிகள் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இத் திட்டத்தின் கீழ் இப்பாகமுவ சபைக்குட்பட்ட பத்தலகொட வட்டாரத்தில் சுமார் ஒரு கோடி 20 இலட்சம் ரூபா செலவில் பாரிய அபிவிருத்திப் பணிகளும் கிராமப்புற மக்களது வாழ்வாதார மேம்பாடுகளுக்காக உதவிகள் வழங்கும் வேலைத்திட்டம் ஸ்ரீல. சு. க. அமைப்பாளர் எம். எஸ். எம். பாஹிம் தலைமையில் நடந்தது.

இதன் போது கும்பலங்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் பதகன கால்வாய் நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா,கும்பலங்க பொத்தேயெலயிலுள்ள மல்கெகுலு முன்பள்ளிப் பாடசாலையின் நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு வைபவம் ஆகியன இப்பாகமுவ பிரதேச சபை உறுப்பினர் எம். எஸ் எம். பாஹிம் தலைமையில் நடைபெற்றது. கும்பலங்க தாய் சேய் மருத்துவ நிலையத்தின் புனர் நிர்மாணப் பணிகளுக்காக ரூபா 5 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கும்பலங்க ஹமீதியா மகா வித்தியாலயத்தில் முன்வாயலை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா பாடசாலை அதிபர் இம்டியாஸ் தலைமையில் இடம்பெற்றது.

அத்தோடு கும்பலங்க அல் பதாஹ் முன்பள்ளிப் பாடசாலையின் சுற்று மதில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா முன்பள்ளி ஆசிரியை தலைமையில் இடம்பெற்றது.மேல் சொன்ன நிகழ்வுகளை எம். எஸ். எம் பாஹிம் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

கும்பலங்க கிராம உத்தியோகஸ்தர் பிரிவில் நபீர் இல்லத்தில் இருந்து செல்லும் உள்ளக வீதி ரூபா 6 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்படும் நிகழ்வும் நேம்பிலி கும்புர கிராம உத்தியோகத்தர் பிரிவில் மிகவும் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த தென்னகோனின் வீட்டுத் திட்ட நிர்மாணப் பணிகளுக்காக ரூபா 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு, தலுக்வத்த கிராமத்தில் பொது நீர்வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் மின் இணைப்பு விஸ்தரிப்பதற்கும் ரூபா 5 இலட்சம் ஒதுக்கீடு,ஹேனகெதர கிராம சேவகர் பிரிவில் தேத்திலியங்க முதுந்துவ கிராம முன்பள்ளிப் பாடசாலையின் நிர்மாணப் பணிக்காக ரூபா 5 இலட்சம் ஒதுக்கீடு, பத்தலகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் நன்னீர் மீன்பிடித் துறையை மேம்படுத்துவதற்காக 24 குடும்பத்திற்கு தலா ரூபா 25,000 விகிதம் நிதி உதவி,இக்கிராம உத்தியோகஸ்தர் பிரிவிலுள்ள 20 வறிய குடும்பத்தை சேர்ந்த பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்பை மேற்கொள்வதற்காக தலா ரூபா 40,000 விகிதம் ரூபா 5 இலட்சம் பெறுமதியான தையல் இயந்திரங்கள், பத்தலகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் மீன் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் 20 குடும்பங்களுக்கு தலா 25,000 ரூபா விகிதம் 6 இலட்சம் வழங்கி வைக்கப்பட்டன.தியத்திலியங்க கிராம சேவகர் பிரிவில் அரச உத்தியோகத்தர்களுக்கான அலுவலகம் நிர்மாணிப்பதற்காக ரூபா 12 இலட்சம் நிதி ஒதுக்கீடு,நேம்பிலி கும்புர கிராம சேவகர் பிரிவில் பார்வதிபுர கோயில் புனர் நிர்மாணப் பணிகளுக்காக ரூபா 2 இலட்சம் ஒதுக்கீடு,ஹேனகெதர கிராம சேவகர் பிரிவில் பத்தலகொட லயனிலுள்ள கோயில் புனர் நிர்மாணப் பணிகளுக்காக ரூபா 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு குப்பை தொட்டிகளுக்காக ரூபா 4 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு,இவ்வாறு பல தரப்பட்ட வேலைத் திட்டங்களை இப்பாகமுவ பிரதேச சபை உறுப்பினர் எம். எஸ். எம் பாஹிம் ஆரம்பித்து வைத்துள்ளார்.













இந்நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்த பின்னர் அவர் தெரிவித்த கருத்துக்கள்

கொரோனா தொற்றால் நாடு பொருளாதார வீழ்ச்சியில் இருப்பதால் கிராம மட்டங்களில் பல்வேறு குறைபாடுகள் நிவர்த்தி செய்ய முடியாமல் காணப்பட்டது. ஆதலால் கிராமப்புற மக்கள் அனுபவித்து வந்த சொல்லொணாத் துயரங்களுக்கு இன்று தீர்வு கிடைத்துள்ளது என்று கூறிக் கொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அரசாங்கம் பொது மக்களினதும் நாட்டினதும் நலனை கருத்தில் கொண்டு இவ்வாறான பாரிய அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

ஏனென்றால் கொவிட் தொற்றில் இருந்து எமது நாடு பெருமளவில் மீண்டு வந்துள்ளது என்பதற்கு இது ஒரு வெளிப்படையான அத்தாட்சியாக உள்ளது.

தடுப்பூசி விடயத்தில் உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு இணையாக இலங்கையிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஒரு இலட்சம் கிராம அபிவிருத்தி திட்டம் எனும் போது நாட்டின் சகல பிரஜைகளினதும் வாழ்வாதாரத்தைப் பலப்படுத்தி நாட்டை சுபிட்சமாக மாற்றும் இந்த திட்டத்தில் இப்பாகமுவ பிரதேச சபைக்கு உட்பட்ட பத்தலகொட வட்டாரத்தில் இரு சமூகம் ஒற்றுமையாக வாழக் கூடிய கும்பலங்க, முதுந்துவ போன்ற கிராமங்களில் இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

குறைந்த பட்சம் ஒரு கிராம சேவையாளர் பிரிவினுள் ஐந்து அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அந்த வகையில் எமது பிரதேசத்தில் கல்வியை மேம்படுத்தல் பின்தங்கிய குடும்பங்களுடைய வருமானத்தை அதிகரித்தல்,சுய தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல். நன்னீர் மீன்பிடித் தொழிலை ஊக்குவித்தல் , விவசாய பயிர்ச் செய்கைக்கு அவசியமான முன்னெடுப்புக்கள், உள்ளக வீதிகள் அபிவிருத்தி போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் இப்பாகமுவ பிரதேச சபைக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களிலும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

மக்கள் எவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை விரும்புகிறார்கள். அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கிராம மட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட வேலைத் திட்டங்களே ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கும் நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ ஆகிய மூவருக்கும் இப்பாகமுவ பிரதேசத்தில் வாழும் சிங்கள, முஸ்லிம் தமிழ், கிறிஸ்தவ அனைத்து மக்களின் சார்பாக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

கொரோனா தொற்றை அடுத்து ஏற்பட்டுள்ள பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மனைப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி தமக்கு தேவையானவற்றை தாமே உற்பத்தி செய்து நாட்டுக்கு பங்களிப்பு செய்யும் வகையிலும் இந்தப் பாரிய அபிவிருத்தி திட்டம் அமைந்துள்ளது.

வாழ்வாதார அபிவிருத்தி, உணவு பாதுகாப்பு, புதிய வருமான வழிகள், கிராமிய உட்கட்டமைப்பு வசதி, அபிவிருத்தி, வர்த்தகம்,

வீட்டுத் திட்டங்கள் உட்பட பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் எமது கிராமப் பிரதேசத்திலுள்ள நான்கு கிராம உத்தியோகஸ்தர் பிரிவுகளிலும் ஆரம்பித்து வைத்துள்ளேன். இந்த நிகழ்வுகளை நாம் ஒவ்வொருவரும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக கருத வேண்டும்.

பாடசாலைக்கு முன்வாயில்லை, முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு ஒழுங்கான கட்டட வசதிகள் இல்லை. பாதுகாப்பு வேலிகள் இல்லை.கால் நடைகள் உள்ளே வருகின்றன.

உள்ளக வீதிகள் எல்லாம் குண்டும் குழியுமாக காணப்படுகிறது.அவரசத்திற்கு பயணம் செய்ய முடியாது. இவ்வாறு எத்தனையோ குறைபாடுகள் அதிகளவு இருந்தது.இவற்றை நிறைவேற்றித் தருமாறு என்னிடம் பலர் கோரிக்கைகள் முன்வைத்தார்கள்.

குறிப்பாக இந்த இடங்களை இனங்கண்டு இன்று அந்த மக்களின் குறைகளை நிறைவேற்றி வைப்பதில் நான் இரட்டிப்பு பெருமிதம் அடைகின்றேன் என்றார்.

**மக்கள் எவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை விரும்புகிறார்கள். அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கிராம மட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட வேலைத் திட்டங்களே ஆரம்பித்து வைக்கப்பட்டன.**









இக்பால் அலி ...

# கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

தெஹிவளை, களுபோவில, சுனந்தாராம வீதி, எட்விட் பிளேஸ், இலக்கம் 1B, எனும் இடத்தில் மற்றும் 47, Ancroft Garth High Shinchliffe, Durham இல் வசித்த மரணித்த காமினி சேனாநாயக அவர்களின் கடைசி விருப்பு ஆவணத்துடன் ஆன சொத்துக்களுக்கு உட்பட்ட வழங்கப்பட்ட வெளிநாட்டு மரண சாசன அதிகார பத்திரத்தினை முத்திரையிடுவது தொடர்பாக குடியியல் சட்டக் கோவை 554(ண) இருந்து 554(வ) வரையான பந்திகளின் கீழ் செய்யப்படுகின்ற விண்ணப்பம்

**வழக்கு இலக்கம்** : **DTS 00015/22**
**தன்மை** : **வெளிநாட்டு மரணசாசன அதிகார பத்திரத்தை முத்திரையிடல்**
**பெறுமதி** : **ரூபாய் 2,787,349.93**

பத்மா காந்தி சேனாநாயக வி.பே.புளுக்கொடி

47, Ancroft Garth High Shinchliffe, Durham DH7, United Kingdom

தனது அற்றோணி தத்துவகாரரான கல்கிஸ்ஸ, அதுல மாவத்தை, இலக்கம் 20 இல் வசிக்கும் ரூவநதினி குருப்பு அவர்கள் மூலம் தெரிபடுகின்ற

**மனுதாரர்**

இந்த அறிவித்தலின் திகதியில் இருந்து 30 நாட்கள் முடிந்ததன் பிற்பாடு இறந்து போன காமினி சேனாநாயக அவர்களின் சொத்துக்கள் தொடர்பாக ஐக்கிய இராச்சியத்தின் High Court of Justice England and Wales Newcastle District Probate Registrar நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள மரணசாசன அதிகார பத்திரத்தை மீண்டும் முத்திரை இடுவதற்காக குடியியல் சட்டக் கோவை xxxviii(ஆ) அத்தியாயத்தின் 554(U) பந்தியின் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமனறத்தில் விண்ணப்பம் ஒன்று கோரப்படுவதாக இத்தால் அறியத் தருகின்றோம்.

**பத்மா காந்தி சேனாநாயக வி.பே. புளுக்கொடி**
**மனுதாரர்**

# விலைமனு அழைத்தல்

## கமத்தொழில் திணைக்களம்

கமத்தொழில் திணைக்களத்தின், விதை மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு உரித்தான பின்வரும் அலகுகளிற்கு உரிய வழங்கல்கள் மற்றும் விற்பனைகளிற்காக தேசிய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்ன.

| A | B | C | D | | | E |
|---|---|---|---|---|---|---|
| தொடர் இலக்கம் | கருமத்தின் பெயர் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்யப்பட வேண்டிய விலைமனுப் பிணையம் மற்றும் விலைமனுச் செல்லுபடிக் காலம் | | | விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா |
| | | | ரொக்கப் பணமாக எனின் | வங்கி வரைவு ஒன்றின் மூலம் எனின் | பிணையம் செல்லு படியாக வேண்டிய காலம் | |
| 01 | 15 ரொட்ட வேட்டர் களைக் கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/01 (2022) | 69,375/- | 138,750/- | 2022.06.22 | 3,000.00 |
| 02 | 03 வட்டத் தகடுகளுடன் கூடிய 15 கலப்பைகளின் கொள்வனவு | SPD/2/5/4/02 (2022) | 30,750/- | 61,500/- | 2022.06.22 | 2,000.00 |
| 03 | 11 கொழுக்கிகளுடன் கூடிய 15 கொழுக்கி கலப்பைகளின் கொள்வனவு | SPD/2/5/4/03 (2022) | 20,625/- | 41,250/- | 2022.06.08 | 2,000.00 |

இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேற்படி ஒவ்வொரு உருப்படிக்குமாகப் பெற்றுக்கொள்ளும் படிவங்களை பூரணப்படுத்தி தனித்தனியாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், விவசாயத்திணைக்களத்தின் சிறாப்பரிடம், மீளளிக்கப்படாத மேற்படி E நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விலை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலைய நிருவாக அலுவலருக்குச் சமர்ப்பித்து 2022.02.17 முதல் 2022.03.08 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர் இலக்கம் 02 மற்றும் 03 இற்கான விலைமனுதாரர்கள், 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவாளரின் அலுவலகத்தில் பதிவுசெய்யப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், அப்பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனு அறிவுறுத்தல்களிற்கமைவாகப் பூரணப்படுத்தப்பட்ட அனைத்து விலைமனுக்களும், “தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு, விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம், விவசாயத்திணைக்களம், பேராதெனிய” என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேற்படி முகவரியிலுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும், மேற்படி நிரல் D இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையை வைப்புச் செய்தல் வேண்டுமென்பதுடன், வங்கி வரைவொன்றின் மூலம் பிணையத்தை வைப்பதாயின், அது, இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

2022.03.09 அன்று மு.ப.10.30 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாகவே அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**விதை மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம், பேராதனிய.**
**2022.03.16**
**081-2388106/122**

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு புத்தம் புதிய பராமரிப்பு மற்றும் Emergency Response TUG (MERT) ஒன்றைக் கொள்வனவு செய்தல்

**B/17/2022**

புத்தம் புதிய பராமரிப்பு மற்றும் Emergency Response TUG (MERT) ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் 125 ஐ.அமெ. டொலர் அல்லது 25,000.00 இல. ரூபாவை (ரூ. 23,148.15 + 8% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டண ரசீதைச் தயாரித்து நேரில் சேகரிக்க வேண்டும். மற்றும் வங்கிப் பற்றுச்சீட்டை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும்.

கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ+ம் http://ceypetco.gov.lk/public-tenders/. மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமான 125 ஐ.அமெ. டொலர் அல்லது 25,000.00 இல. ரூபாவை (ரூ. 23,148.15 + 8% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். தொலைநகல் அல்லது மின்னஞ்சலினூடாக சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு விலைமனுவும் மதிப்பீட்டிக்காக கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவை நிராகரிக்கப்படும்.

சகல விலைமனுக்களுடனும் USS 120,000 (இல. ரூபா 25,000.00) ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2021-11-03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம். வளமுள்ள ஆலோசகர்கள் https://eroc.dre.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் முன்மொழிவுகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

தெளிவுபடுத்தல்கள் ஏதும் இருப்பின் 011-5455289 எனும் தொலைபேசியின் ஊடாக (இருப்பு செயற்பாடுகள் மற்றும் முனைய செயற்பாடுகள்) முகாமையாளர் திரு. மேனக ஜயசிறி அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-5455335 தொலைநகல்: 0094-11-5455424**

Daily News Classifieds, the Housewives' companion

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**117**

**வேன்கள்**
**விற்பனைக்கு**

5 4-0445 டொயோட்டா LH61 வான். சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்ஸி, 254, கட்டுக ஸ்தொட்ட வீதி, கண்டி. 08122342 34. 011819

## வேலைவாய்ப்பு

**320**

**வெற்றிடங்கள்**
**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொலன்னாவ பேக்கரி ஒன்றிற்கு சோர்ட்ஸ் செய்பவர்கள், விற்பனை உதவி செய்வோர், உதவியாளர்கள் பெண்கள் மற்றும் ஆண்கள் தேவை. 0750333249, 0775333249. 011843

## காணி/தோட்டம்

**616**

**வீடு சொத்து**
**கொழும்பு மாவட்டம்**
**விற்பனைக்கு**

கொழும்பு-5, நாரஹேன்பிட்ட, தாபரே மாவத்தை, 03 பேர்ச் காணியுடன் வீடொன்று விற்பனைக்கு. பிரதான பாடசாலைகள், எல்விட்டிகல வீதி, கிரிமண்டல வீதி, ராஜகிரிய வீதி, ரயில் நிலையம் ஆகிய வற்றிற்கு அண்மையில். தொ.பே. 075 9262609. 010794

Repeat Your Ad For Better Offers

## பெயர் மாற்றம்

இறக்காமம் 02, வாங்காமம் 11 இல.156/05 இல் வசிக்கும் வினாயகமூர்த்தி விஜிதரன் ஆகிய நானும் யோகராஜா சர்மிலா, ஜெகதீசன் அனுசியா, ஜெகதீசன் அனுஸ்காந் ஆகியோரும் கடந்த 2013.01.10 திகதி முதல் புனித இஸ்லாத்தை தழுவியுள்ளதால் இனிமேல் சகல ஆவணங்களிலும் முறையே Y.M. முஹம்மது ஆக்கில், Y.பாத்திமா ஹாஜரா, J.பாத்திமா சாலிஹா, J.முஹம்மது ஆக்கிப் எனப் பயன்படுத்துவோம் என்பதையும் இலங்கை சனநாயக குடியரசுக்கும் மக்களுக்கும் தெரியப்படுத்துகிறோம்.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# சம்மாந்துறை பிரதேச சபை

## 2022ம் ஆண்டிற்கு வழங்குநர்கள் மற்றும் தகைமை பெற்ற நிபுணர்கள் பதிவு செய்தல்

**சம்மாந்துறை பிரதேச சபைக்குத் தேவையான கீழ்க்காணும் பண்டங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்வதற்காக 2022 ஆம் ஆண்டிற்கு வழங்குநர்கள் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் இந்த அறிவித்தல் பிரசுரமான திகதி தொடக்கம் 2022.03.03 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.**

உரித்துடைய விடயங்களின் பிரகாரம் பதிவு செய்வதற்கு ஆர்வம் காட்டும் நிறுவனங்கள் மற்றும் நபர்கள் ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறாக தங்களாலே தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுக் கட்டணமாகிய ரூபா 500.00 உம், சேவைகளுக்கு ரூபா 750.00 தொகைக்கு காசுக் கட்டளையொன்று அல்லது காசோலையொன்றுடன் தலைவர்/செயலாளர், சம்மாந்துறை பிரதேச சபை, சம்மாந்துறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் இல்லாவிடில் கையில் கொண்டு வந்து ஒப்படைக்க முடியும். விண்ணப்பம் இடப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **“வழங்குநர்கள் பதிவு செய்தல் - 2022”** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விபரங்கள் 0672260043 தொலைபேசி ஊடாக விசாரித்து அறிந்து கொள்ள முடியும்.

**A.M.முஹம்மட் நௌசாட்**
**தலைவர் பெறுகைக் குழு**
**சம்மாந்துறை பிரதேச சபை.**

**சம்மாந்துறை பிரதேச சபை**
**2022.02.14**

**வழங்கல் விபரம் - பதிவுக் கட்டணம் ரூ. 500.00**

01. கட்டிடப் பொருட்கள் (கருங்கல், மணல், சீமெந்து, செங்கல், கூரைத் தகடு, அஸ்பெஸ்டஸ் சீட்டு, ஏனைய நிர்மாணிப்புப் பொருட்கள்)
02. சுகாதார உபகரணங்கள், குப்பைக் கரத்தை, வீல்பரோ, சவல், மண்வெட்டி, முள்ளு, தாச்சி, கத்தி, தும்புத்தடி, விளக்குமாறு மற்றும் ஏனையவை.
03. கணனி மற்றும் பிரின்டர் உட்பட்டதாக அனைத்து கணனி துணைப்பாகங்கள் வழங்கல்.
04. மரப் பொருட்கள் மற்றும் உருக்கு உபகரணங்கள் வழங்கல் (வீட்டு / அலுவலக)
05. அலுவலக உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள்.
06. வீதி விளக்கு மற்றும் அனைத்து வகையான மின்சார உபகரணங்கள்.
07. நீர் உபகரணங்கள்.
08. எழுது பொருட்கள்.
09. அனைத்து வகையான அச்சு வேலைகள்.
10. புளொக், இறப்பர் முத்திரை ஆகியன.
11. பெயர்ப் பலகை, இலக்கத் தகடு, பெனர், ஞாபகார்த்தப் பலகை, (பித்தளை / கருங்கல்)
12. சைக்கிள், கரத்தை, மதிப்பீட்டு இலக்கத் தகடு.
13. சீருடை, மற்றும் ஏனைய துணிவகைகள்.
14. டயர், ரியுப் இறப்பர் பண்டங்கள், மழைக்கவசம், கையுறை.
15. கம்பூட்ஸ், சப்பாத்து மற்றும் தோல் பொருட்கள்.
16. இரும்பு, உருக்கு, சுருள் கம்பி போன்ற அனைத்து உலோகப் பொருட்கள்.
17. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
18. கொங்கிரீட் உற்பத்திகள்.
19. மருந்துகள் வழங்கல்.
20. துண்டுக் கல் வழங்கல்.
21. கண்ணாடி கவர் மற்றும் கண்ணாடி வழங்குதல்.
22. பீங்கான் பொருட்கள் வழங்குதல்.
23. குப்பைகள் சேர்த்தலுக்கான கொம்போஸ்ட் பைகள் வழங்குதல்.

**சேவைகள் வழங்கல் விபரம் - பதிவுக் கட்டணம் ரூ. 750.00**

24. வாகனம் புதுப்பித்தல் மற்றும் சேவை செய்தல் (நிறுவனம் மற்றும் நிபுணர்கள்)
25. ரோனியோ இயந்திரம் புதுப்பிக்கும் நிறுவனம் மற்றும் தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள்.
26. தட்டச்சுப் பொறி புதுப்பிக்கும் நிறுவனம் மற்றும் தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள்.
27. போட்டோப் பிரதி இயந்திரம் புதுப்பித்தல்.
28. தச்சுத் தொழில் நிறுவனம் மற்றும் மர ஆலை அனுபவமுள்ள தச்சு தொழிலாளர்கள்.
29. உலோக பண்டங்கள், இரும்பு மற்றும் உருக்கு பயன்படுத்தி பொறியியல் ரீதியான வேலைகள் செய்யக்கூடிய நிறுவனம் மற்றும் தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள்.
30. கட்டிட மின்சார அமைப்பு தயாரித்தல் தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள்.
31. வெல்டிங் தொழில் நிறுவனம் மற்றும் நிபுணர்கள்.
32. கணனி புதுப்பித்தல், மற்றும் சேவை செய்யும் நிறுவனம் அந்த அறிவுள்ள தகைமை பெற்ற நிபுணர்கள்.
33. டயர் மீள நிரப்பும் நிறுவனம்.
34. கனரக வாகனம் வழங்கல் (பெகோ இயந்திரம், புல் டோசர், மோட்டர் கிரேடர்)
35. தகனகூடம் தொடர்பாக வேலைகள் செய்யக்கூடிய நிறுவனம் மற்றும் அனுபவமுள்ள தகைமை பெற்ற நிபுணர்கள்.
36. காணிகள் அளத்தல் தொடர்பான தகைமை பெற்ற நிபுணர்கள்.
37. நீர் மோட்டார் புதுப்பித்தல் நிறுவனம் மற்றும் தகைமை பெற்ற நிபுணர்கள்.
38. மதிப்பீடு செய்யப்பட்ட நியமக் குறியீடுகளுக்கு அமைவாக நிர்மாணிப்பு மற்றும் சேவை வழங்கக்கூடிய தகைமை பெற்ற ஒப்பந்தக்காரர்கள்.
39. ஒலி பெருக்கி இயந்திரங்கள், மின் பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் தொடர்பாடல் உபகரணங்கள் வழங்கல்.
40. வாடகை அடிப்படையில் வாகனங்கள் (வேன் வாகனம், முச்சக்கர வண்டி, கெப் வாகனம், லொறிகள், ஆகியன)
41. தையல் கலைஞர் சேவை வழங்கல்.
42. புகைப்படங்கள் பிரேம் இடுதல்.
43. குப்பை போக்குவரத்து டிராக்டர், டிரெயிலர் மற்றும் கை வண்டிகள் பழுதுபார்த்தல்.
44. உணவு பானங்கள் போன்றன வழங்கல்.

AFD

European Union

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

**ஒப்பந்த இல. NWSDB/AFD-EU/SHIFT-1/SMSDC/CS/PACKAGE-01/2021-01**

## நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்முயற்சி (SHIFT) செயற்றிட்டம்

**கழிவுநீர் முகாமைத்துவ திறன் மேம்பாட்டு ஆலோசனைக்கான ஆலோசனை சேவைகளைத் தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பம் - பொதி 1**

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

**திகதி: 2022 பெப்ரவரி 16ஆம் திகதி**
**செயற்றிட்டத்தின் பெயர்: நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்முயற்சி (SHIFT) செயற்றிட்டம்**

1. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு, இலங்கையின் தென்மேற்கு திட்டத்தில் நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்முயற்சி (SHIFT-1) நிதியுதவியின் கீழ் AFD நிதியுதவியின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து (EU) நிதியுதவியைப் பெற்றுள்ளது. இந்த நிதியின் ஒரு பகுதியானது நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்முயற்சியின் (SHIFT) - பொதி 1 கழிவுநீர் முகாமைத்துவ திறன் மேம்பாட்டு ஆலோசனைக்கான ஆலோசனை சேவை ஒப்பந்தத்தின் கீழ் தகுதியான பணக் கொடுப்பனவிற்கு செலுத்தப்படும்.
2. நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்முயற்சியின் (SHIFT) - பொதி 1 கழிவுநீர் முகாமைத்துவ திறன் மேம்பாட்டு ஆலோசனைக்கான ஆலோசனை சேவைகளைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பிற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விண்ணப்பங்களை இலங்கை, பத்தரமுல்ல, பெலவத்த, புதிய பாராளுமன்ற வீதி, இல. 35 ‘‘லக்திய மெதுர’’ நீர் வழங்கல் அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுத் (CPCC), தலைவர் இப்போது அழைக்கின்றார்.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பரீட்சித்தல் என்பவற்றை இலங்கை, இரத்மலானை, காலி வீதி, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள்) உதவிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.

   **உதவிப் பொது முகாமையாளர் (கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள்),**
   **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை,**
   **காலி வீதி, இரத்மலானை, இலங்கை.**
   **தொலைபேசி: +94 11 2605328 மற்றும் +94 11 2638999 நீடிப்பு 1750**
   **தொலைநகல்: +94 112635885**
   **மின்னஞ்சல்:** ***agmtenders@waterboard.lk***

4. விண்ணப்பங்களை 2022 மார்ச் 16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பணிப்பாளர் (பெறுகைகள்), நீர் வழங்கல் அமைச்சு, இல. 35, ‘‘லக்திய மெதுர’’, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
